தமிழர் பொருளியல்

வாரமலர்

TAMILS ECONOMY


விலை - 100/=

இதழ் - 81

27.10.2024


# கறவை மாடு வளர்ப்பில் செயற்கை நுண்ணறிவு



நம்மவர்கள் ஏன் அப்படி இல்லை? 08



வளரும் நாடுகளில் முன்னேற்றத்தை முடக்கும் ஊழல் 10



உற்பத்தி திறனை அதிகரிக்க உதவும் 10 வழிகள். 16

# கறவை மாடு வளர்ப்பில் செயற்கை நுண்ணறிவு

**செயற்கை நுண்ணறிவானது கறவை மாட்டு பண்ணையத்தில் செயற்படுத்தப்படுகிறது. எனினும் இவை அனைத்தும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. அதுவும் இலங்கை போன்ற நாடுகளில் மிகவும் குறைந்த நிலையிலேயே உள்ளன. சகல இடங்களிலும் இணைய மற்றும் ஏனைய தொழில்நுட்ப வசதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கவில்லை.**

கால்நடைவைத்தியர் எஸ்.கிருபாநந்தகுமாரன்



இன்றைய நவீன உலகில் செயற்கை நுண்ணறிவு நுழையாத இடமே இல்லை எனலாம். செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் முன்னைய காலத்தில் மனிதனால் செய்யவே முடியாது எனக் கருதப்பட்ட பல காரியங்களை செய்ய முடிகிறது. அதீத உழைப்புடன் செய்யப்பட்ட பல காரியங்களையும் இலகுவாக செயற்படுத்த முடிகிறது. இந்தக் கட் டுரை கறவை மாடு வளர்ப்பில் செயற்கை நுண்ணறிவின்( Artificial inteligence-AI ) இன்றைய பயன்பாட்டையும் நாளைய எதிர் பார்ப்பையும் ஆராய்கிறது. அதிகரித்துவரும் மனித சனத்தொகை காரணமாக ஏற்பட்டுள்ள உணவுத் தேவை அதிகரிப்பு கால்நடை வளர்ப்பையும் வினைத்திறன் மிக்கதாக மாற்றவேண்டிய தேவையைத் ஏற்படுத்தியுள்ளது. ஏனைய துறைகளைப் போல இங்கும் செயற்கை நுண்ணறிவின் மூலம் வினைத்திறனான உற்பத்திச் செயன் முறைக்கு செயற்கை துண்ணறிவு பயன்படத் தொடங்கியுள்ளது.

பொதுவான மாடு வளர்ப்பு மேய்ச்சலை நம்பிய ஒரு பாரம்பரியமான தொழிலாகும். மாடுகளின் உணவுக்குத் தேவையான புற்களை காணப்படும் இடங்களை நோக்கி மாடுகளை ஓட்டிச் சென்று நிறைவு செய்யும் மேய்ச்சல் முறையாகவே அமைந்திருந்தது. பிற்காலத்தில் மாடுகளை ஓரிடத்தில் வளர்த்து அவற்றுக்கு தேவையான புற்களை பயிரிட்டும் தேவையான அடர்வுத் தீவனத்தை வழங்கியும் வளர்க்க முடிந்தது. இன்று நவீன செயற்கை நுண்ணறிவு மூலம் ஒவ்வொரு மாடாக கவனித்து அவற்றுக்கு வேண்டிய விடயங்கள் கணிக்கப்பட்டு உணவாக வழங்கப்படுகிறது. கறவை மாட்டுப்பண்ணையமும் சரி ஏனைய கால்நடை வளர்ப்புச் செயன்முறைகளிலும் ஆரம்ப கட்டத்திலேதான் செயற்கை நுண் ணறிவின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. வளர்ந்த நாடுகளில் செயற்கை நுண்ணறிவின் செயற்பாடுகள் ஓரளவு பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை வளர்முக நாடுகளில் மிக மிக குறைவாகவே அவற்றின் வகிபாகத்தைக் குறிப்பிட முடியும். நான் சில மாதங்களுக்கு முன் எழுதியிருந்த இஸ்ரேலின் கால்நடை வளர்ப்பு தொடர்பான கட்டுரையில் இஸ்ரேலில் கால்நடை வளர்ப்பு தொடர்பான செயற்கை நுண்ணறிவின் வகிபாகத்தை எழுதியிருக்கிறேன். இஸ்ரேல் கால்நடை வளர்பில் செயற்கை நுண்ணறிவை உச்ச அளவில் பயன்படுத்தும் நாடாகும். இலங்கையை பொறுத்த வரை ஓரளவு பெரிய பண்ணைகளை தவிர ஏனைய இடங்களில் அவற்றின் அரிச்சுவட்டைக் கூட காணமுடியாது. பெரிய பண்ணைகளிலும் பால்கறத்தல் ,உணவு கலவை மற்றும் ஒரிரு முகாமைத்துவ செயற்பாடுகளில் மாத்திரமே செயற்கை நுண்ணறிவு பயன்படுகிறது.

இந்தக் கட்டுரையில் வளர்முக நாடுகளில் எவ்வாறெல்லாம் செயற்கை நுண்ணறிவு கறவை மாட்டுப் பண்ணைகளில் செயற்படுகிறது என்பதையும் இலங்கையில் எவ்வாறு அதனைப் பயன்படுத்தமுடியும் என்பதை சுட்டிக் காட்ட முயல்கிறேன்.

### கறவை மாட்டுப் பண்ணைகளில் செயற்கை நுண்ணறிவு பயன்படும் இடங்கள்.

சுகாதார மேம்பாட்டுச் செயற்பாடு - மாடுகளில் பொருத்தப்படும் கழுத்துப் பட்டிகள்( Collars with sensors) , காதுச் சுட்டிகள் (ear tags), கால்களில் பொருத்தப்பட்டுள்ள pedo meter உபகரணம், வீடியோ கமராக்கள், சென்சார்கள் மூலம் அவற்றின் செயற்பாடுகள் அவதானிக்கப்படுகின்றன. உடலின் வெப்பனிலை, சுவாச வீதம், இதயத் துடிப்பு, நாடித்துடிப்பு, அவை நடக்கும் விதம், எழும்பியிருக்கும், படுத்திருக்கும் விதம், அசையூண் இரப்பை அசைவு , ஓமோன்கள், பால் மற்றும் ஏனைய உடற் திரவங்களின் மாற்றங்கள் என்பவற்றை அறிந்து அசாதராண நிலையை அவதானிக்க முடியும். நோய் நிலையை முன்கூட்டியே அறிந்து சிகிச்சையை முதலே ஆரம்பித்து நோய்நிலை முற்றுவதை தவிர்த்து உயிரிழப்பைத் தவிர்க்க முடியும். இதனால் மருத்துவ செலவைக் கணிசமாகக் குறைக்க முடியும். தேவையற்ற நுண்ணுயிர் கொல்லி மருந்து பாவனையை தவிர்க்க முடியும். இது மனித சுகாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தக் கூடியது.

### உணவூட்டல் மேம்பாடு

ஒவ்வொரு விலங்குகளின் உணவுத் தேவைகள் கணிப்பிடப்படுகின்றன. உணவுகளிலுள்ள கூறுகளின் போசணைப் பெறுமதி அறியப்பட்டு விலங்குகளின் அன்றாடத் தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றன. ( சமச் சீரான தீவனம்) இதன்போது வளர்ச்சிவீதம், உணவு மாற்றுத்திறன் போன்றனவும் அவதானிக்கப் பட்டு குறைபாடுகள் களையப்பட்டு தேவையான தீவனங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. உணவின் தரம் சோதிக்கப்படுகின்றன. தற்காலத்தில் பல நாடுகளில் கால்நடைத் தீவன உருவாக்கம்(Feed formulation), TMR போன்ற நவீன உணவூட்டல் முறைகள் செயற்கை நுண்ணறிவினாலேயே கலவை

செய்யப்படுகின்றன.

தீவனப்புற்கள்வளர்க்கப்படும்மண்ணின் ஊட்டச்சத்துக்கள்,ஈரப்பதன் போன்றன கணிக்கப்படுகின்றன. பயிர் நோய்கள் அவதானிக்கப்பட்டு அழிக்கப் படுகின்றன. இதற்கு நவீன சென்சர்களும் ட்ரோன்களும் பயன்படுகின்றன. களைகொல்லிகளும் உரங்களும் மண்ணின் அளவுக்கும் தேவைக்குமேற்ப தானியங்கி முறையி லேயே விசிறப்படுகின்றன. உச்சபட்ச ஊட்டம் உள்ளபோதே கணிக்கப்பட்டு பயிர்களின் அறுவடையும்நிகழ்கிறது. சேமிக்கப்படுகிறது. தீவனப் பயிர்ச் செய்கைக்கு வேண்டிய தண்ணீர் அளவு கணிப்பிடப்படுகிறது. பயிர்ச் செய்கைக்கு ஏற்ற காலநிலை எதிர்வுகூறல் சரியாக இடம்பெறுகிறது.

### இனப்பெருக்கச் செயற்பாடுகள்

கறவை மாடு வளர்ப்பில் சினைப்பருவ அறிகுறிகளை தெளிவாக அடையாளம்கண்டு சினைப்படுத்த வேண்டியுள்ளது. உடலிலுள்ள ஓமோன் மாற்றங்கள,கால்நடைகளின் இயல்பு மாற்றங்கள்(ேனழஅநவநச,வீடியோ மூலம்) அவதானிக்கப்பட்டு அதற்கேற்ப சினைப்படுத்தல் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. சில நாடுகளில் சினைப் படுத்துனர்கள்,கால்நடை வைத்தியர்களுடன் மேற்படி விடயங்கள் நேரடியாக இணைக்கப்பட்டு அவர்களே மாற்றங்களை உணர்ந்து சினைப்படுத்த வேண்டிய தருணங்களுக்கேற்ப செயற்பட முடிகிறது. (இஸ்ரேல்). இதனால் சினைப்பருவம் தவறும் நிலை தவிர்க்கப் படுகிறது.

மாடுகள் கன்றீனும் தருணங்களிலும் உடலியல் திரவங்களிலும் நடத்தையிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. இதனை சரிவர அறிந்து கொள்வதால் அந்தந்த மாடுகள் மீது அதீத கவனத்தைச் செலுத்தி கன்றீனலை இலகுவாக்க முடிகிறது. கன்றீனும் போது ஏற்படத்தக்க பல பிரச்சனைகள் தவிர்க்கப் படுகிறது.

மேலும், சிறந்த சந்ததிகளை பெற வேண்டி, சிறப்பான காளைகளின் விந்தணுக்களை பெறக்கூடிய வகையில் அவற்றின் தரவுகள் பல செயலிகளில் தரவேற்றப்பட்டுள்ளன. அவற்றை பயன் படுத்தி வளமான தேவையான சந்ததிகளை உருவாக்க முடிகிறது.இது பல நாடுகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பாலின் தரம் - பாலின் கட்டமைப்புக் கூறுகளின் மாற்றம் அவதானிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. குறிப்பாக மடியழற்சி நோயின் போது பாலின் கலங்கள் மற்றும் நுண்ணங்கிகளின் அளவு அதிகரிக்கிறது. இவற்றை அறிவது மூலம் முன்கூட்டிய சிகிச்சை செய்யப்பட்டு பால் பழுதடைதல் தவிர்க்கப் படுகிறது. மடியழற்சி நோயும் அழாரம்ப நிலையிலேயே குணமாக்கப் படுகிறது.

### நடத்தை இயல்புகளை அவதானித்தல்

மாடுகளின் வழமையான நடத்தைகளில் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்கும் அதேவேளை அசாதாரண நடத்தைகள் உடனுக்குடன் அவதானிக்கப் பட்டு சீர் செய்யப்படுகின்றன. உதாரணமாக சினைப்பருவ வேட்கையை காட்டும் மாடுகள் அதிகம் நடக்கின்றன. மாடுகள் ஒன்றையொன்று தாவும். இவை துல்லியமாக அவதானிக்கப்படுகின்றன.

GPS தொழில் நுட்பம் மூலம் மேய்சல் தரைகளில் மேயும் கால்நடைகள் அவதானிக்கப் படுகின்றன. இதனால் அவை பொருத்தமற்ற இடத்துக்கு செல்வதும் தொலைந்து போகாமலும் பாதுகாக்கப் படுகின்றன. இந்த தொழிநுட்பத்தை பயன்படுத்தி யானைகளின் நடத்தைகள் அவதானிக்கப்படுகின்றன. நாய்களுக்கு மைக்ரோசிப் செலுத்தி விடுவது மூலம் அவை தொலைந்து போகாமல் பாதுகாக்கப் படுகின்றன.

சூழலியல் மற்றும் காலநிலையை வினைத்திறனாக பயன்படுத்தல் - முன்னரே விளக்கியது போல சாதகமற்ற காலநிலைகள் கணிக்கப்பட்டு பாதுகாப்பு முன்னெச்சரிகை நடவடிக்கைகள் செய்யப்படுகின்றன. தண்ணீர் வினைத்திறனாக பாவிக்கப் படுகிறது. சூழலுக்கு விடுவிக்கப் படும் பண்ணைக் கழிவுகள் பொருத்தமாக நிர்வகிக்கப்படுகின்றன. அண்மைக்காலத்தில் பண்ணைகளிலிருந்து வெளியேறும் மெதேன் எனும் பச்சை வீட்டு வாயுவையும் கணிக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. மெதேனின் அளவைக் குறைக்கும் விதமான முகாமைத்துவத்தை இதன் மூலம் சீர் செய்ய முடிகிறது. பண்ணையின் சாரிரப்பதன், வெப்பனிலை மற்றும் ஏனைய சூழலியல் காரணிகளில் ஏற்படும் மாற்றங்கள் உணரப்பட்டு தானியங்கி இயந்திரங்கள் செயற்பட்டு ( மின் விசிறி, fogging) சூழல் சரி செய்யப்படுகிறது. இது மாடுகளின் நலனுக்கு சிறப்பானதாகும்.

விநியோகம் கட்டமைப்பை சிறப்பாக செயற்படுத்தல் - பால் மற்றும் பால் உற்பத்திகளை விநியோகம் செய்யும் தானியங்கி முறைகள் செயற்கை நுண் ணறிவால் கட்டுப்படுத்தப் படுகின்றன. பால் கறவை இயந்திரங் களால் கறக்கப்படும் பால் நேரடியாகவே பால் பதனிடல் நிலையங்களுக்கு அனுப்பப்ப டுகின்றன. இங்கு மனித தலையீடு குறைக்கப்பட்டு பால் பழுதடைதல் கணிசமாக தவிர்க்கப்படுகிறது. பாலுற்பத் திகளும் விநியோக வாகனங்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்படுகின்றன.

பண்ணைச் செயற்பாடுகள் - பண்ணைகளின் கொள்வனவு, விற்பனை கணக்கு விடயங்கள் ,இருப்பு விபரங்கள், மாடுகளின் விபரங்கள், சக்தி வழங்கல் விபரங்கள்,தொழிலாளர் விடயங்கள், உணவு



வழங்கல் மற்றும் கழிவகற்றல் விடயங்கள், பண்ணையின் வெப்பனிலை சாரீரப் பதன் அவதானிப்பு என சகல விடயங்களும் செயற்கை நுண்ணறிவால் நிர்வகிக்கப் படுகின்றன. இதன் மூலம் தேவையற்ற சக்தி விரயம் தவிர்க்கப் படுகிறது. செலவு குறைக்கப் படுகிறது. ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. இதனால் மொத்த பண்ணைச் செயன்முறையும் வினைத்திறனாக நடைமுறைப் படுத்தப் படுகிறது.

விலங்குகள் கொள்வனவு - நடைமுறையில் வயதான மற்றும் உற்பத்தி குறைந்த மாடுகளை வெளித்தோற்றத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்யும் பண்ணையாளர்கள் ஏமாற்றப்படுகின்றனர். வயது,பாலுற்பத்தி,பெற்றோர் பிள்ளைகள் விபரங்கள்,சிகிச்சை விபரங்கள் என சகல விடயங்களும் தரவேற்றப்பட்ட மாடுகளை கொள்வனவு செய்யும் போது ஏமாற்றம் தவிர்க்கப்படுகிறது. விற்பனையும் இலகுவாகிறது.

இப்படியாக பல வழிகளில் செயற்கை நுண்ணறிவானது கறவை மாட்டு பண்ணையத்தில் செயற்படுத்தப்படுகிறது. எனினும் இவை அனைத்தும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. அதுவும் இலங்கை போன்ற நாடுகளில் மிகவும் குறைந்த நிலையிலேயே உள்ளன. சகல இடங்களிலும் இணைய மற்றும் ஏனைய தொழில்நுட்ப வசதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கவில்லை. அதற்குரிய கருவிகள் விலை அதிகமாகவும் கிடைப்பது அரிதாகவும் உள்ளது. பலருக்கு அவற்றை இயக்கும் நுட்பம் தெரியாது. இது தொடர்பாக அதிகாரிகள் மட்டத்திலேயே விழிப்புணர்வு கிடையாது. மேலும் இலங்கையிலுள்ள பண்ணைகள் தொடர்பான விபரங்கள் பதிவுகள் சரிவர பேணப்படுவதில்லை. மேம்படுத்தப் படுவதில்லை. இலங்கையில் இது தொடர்பாக துறை சார்ந்தவர்கள் ஆராய வேண்டும். வினைத்திறனான கால்நடை வளர்ப்புக்கு செயற்கை நுண்ணறிவு முக்கியமான விடயமாகும். இதனைப் பயன்படுத்தி கறவை மாட்டுப் பண்ணையத்தை அடுத்த பரிமாணத்துக்கு கொண்டு செல்ல முடியும்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777304010 / 0702675575

# அறுகம்குடா அச்சுறுத்தலும் உல்லாச பயணத் துறையும்

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அண்மைக்காலத்தில் அதிகரித்திருப்பதாக செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கும் நிலையில் கடந்த வாரம் வெளிவந்த செய்தி அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. இலங்கை அரசாங்கம் பிரச்சினையை வெளிப்படுத்தி பரபரப்பை ஏற்படுத்தாமல், நிலைமைகளைக் கையாள்வதற்கு முற்பட – அமெரிக்க வெளியிட்ட பயண எச்சரிக்கைதான் அச்ச நிலையை ஏற்படுத்தியது.

ஆபத்தான நிலை ஏற்படாமல் அரசாங்கம் நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் வெற்றிபெற்றிருக்கின்றது. பொலிஸ், முப்படைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இதற்காக பெரும் பணியாற்றியிருக்கின்றார்கள். இப்போதுள்ள பிரச்சினை உல்லாசப் பயணத்துறைக்கு இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களிலிருந்து நாட்டை மீட்பது எப்படி என்பதுதான்.

அநுரகுமார திசநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்கொண்டுள்ள முதலாவது நெருக்கடி அல்லது சவால்இது. இதனை அவர்கள் வெற்றிகரமாக எதிர்கொண்டிருந்தாலும், இது போன்ற சவால்கள் தொடராது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. சர்வதேச கள நிலைமைகள் அவ்வாறுள்ளன.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீள்வதற்கு பிரதான பங்கை வகித்தது சுற்றுலாத் துறைதான். கோவிட் 19 அதன்பின்னர் வந்த பொருளாதார நெருக்கடி என்பன உல்லாசப் பயணத்துறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன. அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருவதில் உல்லாசப் பயணத்துறைதான் இப்போது முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

இந்த நிலையில் அறுகம்குடா குறித்த அச்சுறுத்தலும், அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் பயண எச்சரிக்கையும் இலங்கையின் சுற்றுலாத் துறைக்கான மிகப் பெரிய அச்சுறுத்தல் என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்விடயத்தில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து எதிரணியினர் தொடர்ச்சியான விமர்சனங்களை முன்வைத்து வந்தாலும், நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் அரசாங்கம் வெற்றி பெற்றிருக்கின்றது.

அரசாங்கத்துக்கு இன்று இரண்டு பிரச்சினைகள் உள்ளன. முதலாவது – பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். இரண்டாவது உல்லாசப் பயணிகளை மீள வரச் செய்வதற்குத் தேவையான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

மத்திய கிழக்கில் உருவாகியிருக்கும் போர் இலங்கையிலும் பிரதிபலிக்கும் தன்மையைக் கொண்டிருக்கின்றது என்பதற்கு இந்த வாரச் சம்பவம் ஒரு உதாரணம்.. அதேவேளையில், வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்காக விசா நடைமுறைகளையும் அரசாங்கம் இலகுபடுத்தியுள்ளது. அதிகளவு அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கான உபாயமாக இதனை அரசாங்கம் செய்திருந்தாலும், புலனாய்வுச் செயற்பாடுகளை அதிகப்படுத்துவதுடன், சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை பாதுகாப்பான நாடு என்ற உணர்வை ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

# தக்காளி இல்லாமல் சமையலா?

ஆனந்தன் பிறேம்நாத்

**ஏக்கருக்கு 14,000 செடிகள் வரை நாட்ட முடியும். பயிரை நட்டு உயிர் நீர் பாய்ச்ச வேண்டும். அதன்பின்பு மண்ணின் ஈரத்தன்மையை பார்த்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நாற்று நட்ட ஒரு மாதத்திற்கு பின்பு அதில் வளர்ந்துள்ள தேவையற்ற களைகளை நீக்கி வேர்களுக்கு தொழு உரம் இடவேண்டும் இதனால் நல்ல வளர்ச்சியும் நல்ல விளைச்சலும் பெறலாம்.**

தக்காளி என்பது பழங்களில் ஒன்றாகும். (ஆனால் நாங்கள் இதை ஒரு காய்கறியாகவே கருதுகின்றோம்) அதோடு தக்காளியின் தாயகம் மெக்சிகோ என்று கூறப்படுகின்றது தக்காளியில்

கோ.1
கோ.2
மருதம் (கோ 3)
பிகேஎம் 1
பூசாரூபி,
பையூர் 1
சிஒஎல்சிஆர்எச் 3

என்று பல ரகங்கள் உள்ளது இதில் நாட்டு ரகங்களை நாங்கள் தேர்ந்தெடுப்பது சிறப்பாக இருக்கும். காரணம் நோய் எதிர்ப்பு சக்தி உடையதாக இருக்கும். பராமரிப்புத் தேவை அதிகம் ஏற்படாது ஒரு சில பண்ணையாளர்கள் தக்காளியை ஆண்டு முழுவதும் பயிரிட்டாலும் தக்காளியானது ஜூன் - ஜூலை, நவம்பர் - டிசம்பர், பிப்ரவரி - மார்ச், மாதங்கள் தக்காளி பயிரிடுவதற்கு ஏற்ற பருவங்கள் ஆகும். வண்டல் மண் மற்றும் செம்மண்ணில் நல்ல விளைச்சல் தரும். மண்ணின் கார அமில தன்மை 6 - 7 ஆக இருக்க வேண்டும். தக்காளியானது 15 டிகிரி செல்சியஸ் இற்கும் குறைவான வெப்பநிலை காணப்படுமாயின் விளைச்சல் பாதிக்கப்படும்.

35 டிகிரி செல்சியஸ் இற்கு அதிகமான வெப்பநிலை இருந்தாலும் இதன் வளர்ச்சி மற்றும் உற்பத்தி பாதிக்கப்படும். ஒரு ஏக்கரில் பயிரிட 175 கிராம் அளவுள்ள விதை போதுமானது. தேவையான அளவு தொழுவுரம் இட்டு 1.5 - 3 மீட்டர் நீளமுடைய நாற்றங்காலை தயார் செய்து அதில் தக்காளி விதைகளை தூவி நீர் பாய்ச்ச வேண்டும்.

30 நாட்களில் நாற்றுகள் வளர்ந்துவிடும். நாற்றுக்களை நடுவதற்கு முன்பு நிலத்தில் 2 டன் மக்கிய உரம் அல்லது தொழு உரம் இட்டு நன்கு உழுது பாத்திகளை உருவாக்க வேண்டும். 60 செ.மீ இடைவெழியில் நீளமான பாத்திகள் அமைத்து 45 செ.மீ இடைவெழியில் செடிகளை நட வேண்டும். செடிகளை நடும் போது செடிகளுக்கு இடையில் கிளிசரியா கொத்துகளை குத்தி விடுவது சிறந்ததாக இருக்கும் காரணம் சிறிய செடிகளுக்கு வெயில் தாக்கம் இருக்காது அதோடு கிளிசரியா இலைகள் உதிர்ந்து செடிகளின் அடிப்பகுதியில் விழுந்து மக்கும் போது செடிக்கு தேவையான நைட்ரஜன் கிடைக்கும்.

ஏக்கருக்கு 14,000 செடிகள் வரை நாட்ட முடியும். பயிரை நட்டு உயிர் நீர் பாய்ச்ச வேண்டும். அதன்பின்பு மண்ணின் ஈரத்தன்மையை பார்த்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நாற்று நட்ட ஒரு மாதத்திற்கு பின்பு அதில் வளர்ந்துள்ள தேவையற்ற களைகளை நீக்கி வேர்களுக்கு தொழு உரம் இடவேண்டும் இதனால் நல்ல வளர்ச்சியும் நல்ல விளைச்சலும் பெறலாம்.

பூ பிடிக்க ஆரம்பிக்கும் போது இயற்கையாக உருவாக்கப்பட்ட தேமோர் கரைசலை பயன்படுத்தினால் பூ உதிர்வது கட்டுப்படுத்தப்பட்டு அதிக அளவில் காய்கள் பிடிக்கும். காய்கள் முற்ற ஆரம்பிக்கும் போது செலவில்லாமல் இயற்கையாக உருவாக்கக்கூடிய கிருமிநாசினியான பஞ்சகாவியா. மற்றும் கற்பூர கரைசலையும் பயன்படுத்தலாம். பச்சைக் காய் துளைப்பான் போன்ற புழுக்கள் இதற்கு நிச்சயம் கட்டுப்படும் பூச்சிகளின் தாக்கம் அதிகமாக இருந்தால் இயற்கை கிருமி நாசினியான அக்கினி அஸ்திராவை பயன்படுத்தலாம். முற்றுமுழுதாக இயற்கையாக பயிரிடுவதனாள் அதிக லாபம் பெறலாம்.

அறுவடைக்கு தயாரான காய்களை மட்டும் பறிக்க வேண்டும், காய்கள் கரும்பச்சை நிறத்தில் இருந்து வெளிர் மஞ்சள் நிறத்திற்கு மாறும்பொழுது அதனை அறுவடை செய்ய வேண்டும். நீர்ப்பற்றாக்குறை இல்லாமல். விவசாயின் உழைப்பு மட்டும் இருந்தால் போதும். ரசாயன உரத்திற்காக ஒரு ரூபாய் கூட செலவு செய்யத் தேவையில்லை 135 நாட்களில் ஒரு ஏக்கருக்கு 15 டன் தக்காளி அறுவடை செய்யலாம்.

தக்காளி இல்லாத சமையல் இல்லை என்றுதான் கூறவேண்டும். சமையலை பொறுத்தவரை அத்தியவசியப் பொருளாக தக்காளி உள்ளது. ஆம் தக்காளியை பொறுத்தவரை சந்தை வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. சூகுறிப்பு தக்காளியை பொறுத்தவரை மிக விரைவில் பழுதடைய கூடிய ஒன்று ஆகையால் எந்த அளவில் சந்தை வாய்ப்பு உள்ளது என்பதனை நன்கு ஆராய்ந்து அதற்கு ஏற்றால் போல் உற்பத்தியின் அளவினை அதிகரிக்க வேண்டும்.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,07,800 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,26,650 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** எவ்வளவு உழைத்தாலும் செலவுகள் அதிகமாக வருகின்றதே? இந்த நிலையில் வரவுக்குள் எவ்வாறு செலவு-களை வைத்துக்கொள்வது?

**கயல்வழி கண்ணன்**
**வவுனியா**

**பதில் -** அதிகரிக்கும் வருமானத்துக்கு ஏற்ப, ஒருவரது செலவுகளும் தொடர்ந்து அதிகரிக்கும் என்கிறார், பொருளாதார நிபுணரான பார்கின்சன். இன்னும் சொல்லப்போனால், “ஒருவர் எவ்வளவு பணம் சம்பாதிக் கிறாரோ அதைவிட சற்று ‘திகமாகவே அவர் செலவழிப்பார்” என்கிறார் அவர்.

உளவியல் ரீதியாக பார்க்கையில், இது சராசரி மனிதர்களின் மனோபாவம். இதைக் கடப்பவர்களே பணக்காரர்கள் ஆகிறார்கள்.

இதற்கானசிலஉத்திகளையும்பொருளாதார நிபுணர்கள் முன்வைத்துள்ளார்கள்.

வருமானம் அதிகரிக்கும்போது வருமானத்தில், 50மூ மட்டுமே தன்னுடைய பணம் என எண்ணி பணக்காரர்கள் செலவழிக்கிறார்கள். மீதமுள்ள 50மூ பணத்தை, அது தன்னுடைய பணம் அல்ல என்ற சிந்தனையோடு அதை எதிர்காலத்துக்காக சேமிக்கிறார்கள் என்கிறார், பிரையன் ட்ரேசி என்கிற தன்முனைப்பு எழுத்தாளர். பணக்காரர்கள் வங்கிகளுக்கு சேமிப்புக்கும், ஸ்டாண்டிங் இன்ஸ்டிரக்ஷன் (ளுவயனெைபெ ஐளெவசரஉவழைெ) கொடுத்து விடுகிறார்கள். தானாகவே சேமிப்புக்கு சென்றுவிடும். இதனால் ஒவ்வொரு மாதமும், சேமிக்கலாமா, வேண்டாமா என்று சிந்திக்க வேண்டிய அவசியம் கிடையாது.

பணக்காரர்கள் எந்தப் பொருளை வாங்கும் போதும் பேரம் பேசத் தவறுவதில்லை. பேரம் பேசுவதால் தங்கள் மதிப்பு குறைந்துவிடும் என்று எண்ணுவதும் இல்லை. மேலும் அதிக விலை உள்ள பொருள் வாங்குவதையும் அவர்கள் தவிர்க்கவே விரும்புகிறார்கள். துணிகள் முதல் வாகனங்கள் வரை எல்லாப் பொருள்களிலும் மிகக் குறைந்த விலை, நடுத்தர விலை, சற்று உயர்வான விலை, மிக அதிக விலை என்ற நான்கு வகையான விலைகள் உள்ளன. பணக்காரர்கள் இரண்டாவது அல்லது மூன்றாவது விலையில் உள்ள பொருள்களை மட்டுமே வாங்குகிறார்கள். மேலும் தேவையற்ற பொருட்களை அவர்கள் வாங்குவதில்லை.

தவணை முறை என்கிற சித்தாந்தம் வந்தாலும் வந்தது. செல்போன், வாகனம், வீடு என அனைத்தையும் தவணை முறையில் வாங்கும் பழக்கம் நம்மிடம் வந்துவிட்டது. வருமானம் தரக்கூடிய அல்லது செலவைக் குறைக்கக்கூடிய எந்தப் பொருளையும் தவணை முறையில் வாங்குவதில் தவறில்லை. ஏனென்றால் அவற்றின் மூலம் கிடைக்கிற கூடுதல் தொகையை வைத்து நாம் வட்டியைக் கட்டி, கடனை அடைத்து விடலாம். ஆனால் வருமானம் தராத எந்த பொருளையும் நாம் கடனில் வாங்குவது என்பது நமக்கான கூடுதல் செலவையே ஏற்படுத்தும்.

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 280/= |
| உருளைக்கிழங்கு | 300/= |
| பச்சை மிளகாய் | 280/= |
| தக்காளி | 310/= |
| மரவள்ளிக்கிழங்கு | 280/= |
| கோவா | 260/= |
| கரட் | 260/= |
| வாழைக்காய் | 240/= |
| சின்ன வெங்காயம் | 320/= |
| பாகற்காய் | 340/= |
| வெண்டிக்காய் | 200/= |
| பயற்றங்காய் | 180/= |
| பீற்றூட் | 180/= |
| முருங்கைக்காய் | 380/= |
| தேங்காய் | 140/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 207/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 313/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர்டொலர் - | 219/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 374/= |
| சுவிஸ் பிராங் - | 331/= |
| அமெரிக்க டொலர் - | 289/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 201/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 325/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 227/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 346/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |



# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

பாண்டியன் ஸ்ரோர்ஸ் சீரியலைப் பாத்துக்கொண்டு இருந்த வீட்டம்மா நிண்டாப்போல ஒரு வேலைவெட்டியும் இல்லை தீண்டு திண்டு போட்டு உந்தக் கண்டிறியாத போனை எந்த நேரமும் நோண்டினபடி இருக்கிறியள் எண்டு கோவிட் நேரம்எரிவாயு வரிசையில இடையில பூந்த ஆளைப்பாத்து பின்னால நிக்கிற ஆள் கத்துறமாதிரி கொஞ்சம் உரப்பாவே கத்தினா.

மத்தியானம் வைச்ச குழம்பை உறைப்பா வைச்சுப்போட்டனோ எண்டு எனக்கெண்டாப்பயமாப் போச்சு. பெற்றோல்செற்றில முகாமையாளரிட்டை அவருக்கு தெரிஞ்ச ஆள் இரகசியமாக் கானில பெற்றோல் கேக்கிற மாதிரி மெல்லமா என்ன சத்தம் இந்த நேரம் எண்டு கேட்டன்.என்ன சத்தமோ உழுந்து ஊறப்போட்டு கிடக்கு அதை எடுத்து ஆட்டி உந்தப்பெடி பெட்டைக்கு நாலு வடை சுட்டுக் குடுப்பம் எண்டில்லை உதை நோண்டிக்கொண்டு இருக்கிறியள்எண்டு வாயால வடை சுடுகிற ஆக்கள் மாதிரியே கதைச்சா.

எனக் கெண்டா வடை சுட எல்லாம் இப்ப விருப்பம் இல்லை. ஏனெண்டா முந்தி நான் தான் வடை சுடுகிறனான். உந்தப்பெடிபெட்டை அப்பா சுடுகிற வடைதான் நல்லம் எண்டு சேர்ட்டிபிக்கற் எல்லாம் தந்ததுகள்தான். எங்கட ஆச்சியும் உதை ஒமடி பிள்ளை எண்டு ஆமோதிப்பா .பேந்து ஆர் என்னத்த குத்தி விட்டிச்சினமோ தெரியா பெடிபெட்டை நான் சுடுகிற வடை சரியில்லை. நீங்கள் என்ன சுடுகிற வடை எல்லாம் எங்களுக்கோ தாறியள் வேறை ஆருக்கோவும் குடுக்கிறியள். இப்பிடியே போனா எங்களுக்கு கடைசியில தாச்சியும் மிஞ்சாது எண்டு சண்டை பிடிச்சு வீட்டம்மாதான் வடை சுடவேணும் எண்டு போட்டுதுகள்.

பேந்தென்ன வீட்டம்மா வடை சுட வெளிக்கிட்டா. பெடிபெட்டை எல்லாம் கைதட்டி ஆரவாரம் செய்தினம். உதால உசாரான வீட்டம்மா இந்தாபார் உழுந்தில்லாம வடை சுடுறன்.கனக்க ஏன் போவான் எண்ணை இல்லாமலே வடை சுடப்போறன் எண்டு வெளிக்கிட்டு தனக்குத்தான் எல்லாந்தெரியும் எண்ட மமதையில கூப்பன்மாவில கண்டதையும் கலந்து சுட்ட வடை ஒண்டுக்கும் உதவாமப் போக பெடிபெட்டை வீட்டம்மாக்கு ஒரு இழவுந்தெரியாது . இப்பிடியே விட்டா நாங்கள் பட்டினி தான் கிடக்கவேணும் எண்டு வீட்டம்மாவை குசினியால வெளியில போ எண்டு கத்த வெளிக்கிட்டுதுகள். அதுகளோட சேந்து ஆச்சியும் புறுபுறுக்க வெளிக்கிட்டு விட்டா.

உதைப்பாத்த வீட்டம்மான்ரை தமையன் பெடிபெட்டையை அடிப்பன் முறிப்பன் எண்டு கம்போட வர பெடிபெட்டை கம்பைப்பறிச்சு அவருக்கு நாலு போட அவர் வீட்டால ஓடிப்போனவர் இப்ப எங்க போனவர் எங்க இருக்கிறார் எண்டு ஆருக்கும் தெரியேல்லை. பெடிபெட்டையின்ரை சத்தம் வரவரக் கூட வீட்டம்மா இப்ப என்ன வடை சுடச்சொல்லுறா. நான்வடை சுடப்போறன் எண்டு அறிஞ்சதும்என்ரை கூட்டாளிமார் மச்சான் ஒண்டுக்கும் பயப்பிடாதை உனக்குத் தேவையான உழுந்து தாறம், எண்ணை தாறம், விறகுதாறம், நீநல்லா வடை சுட்டுக் குடுத்து அதுகளின்ரை வாயை கத்தாத மாதிரி அடைச்சு விடு எண்டு கோலுக்கு மேல கோல் எடுத்துச் சொல்லாறாங்கள்.

சரி வீட்டம்மா கெஞ்சிச் சொல்லிப் போட்டா கூட்டாளிமார் சொல்லிப் போட்டாங்கள் எண்டு நான் ஆட்டுக்கல்லை எடுத்துக் கழுவி வடை சுட ஆயத்தப் படுத்த பெடிபெட்டை இன்னும் என்னை உர்...உர்... எண்டு பாக்குதுகள். இவர் சிலவேளை காகத்துக்குப் போடத்தான் வடை சுட வெளிக்கிடுறாரோ எண்டு தங்களுக்கை குசுகுசுக்குதுகள். எண்டாலும் நான் உந்தக்கதை காதில விழாதமாதரி ஊறப்போட்ட உழுந்தைக் கழுவ வெளிக்கிட்டன்.

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.
அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.
உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.
இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1.வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.
2.சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.
3.கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.
4.ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.
5.நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.
தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1.பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2.இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.
3.அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.
4.திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.
5.கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்
உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**தற்காலத்தில் தண்ணி முறிப்புக்குளம் புனரமைக்கப்பட்டு ஒருளவு விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அது முழுமையாகவில்லை. குருந்தூர்மலை சர்ச்சைக்குரிய இடமாகவே இன்னும் இருக்கிறது. மணலாற்றுப் பிரதேசம் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து துண்டிக்கப்பட்டு அனுராதபுர மாவட்டத்துடன் வெலிஓயா என்ற பெயரில் தனி மாவட்டமாக மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் அநுராதபுரத்துக்கு ஒரு கடற்கரையும் கிடைத்தது. தமிழர் தாயகப் பகுதியான வடக்கும் கிழக்கும் நிலத்தால் பிரிக்கப்பட்டுள்ளது.**

# நம்மவர்கள் ஏன் அப்படி இல்லை?

## பார்வை 11



தமிழ்க்கவி

முல்லைத்தீவு மாவட்டத்தில்பெருமளவில் நெல் பயிரிடப்படுகிறது. வட பகுதியில் மழைவீழ்ச்சி அதிகமுள்ள மாவட்டம் முல்லைத்தீவு. ஆயினும் பெருமளவு மழைநீர் கடலில் கலந்து விடுகின்றன. முல்லைத்தீவின் மிகப்பெரிய பழைய குளமாக தண்ணீமுறிப்புக்குளம் உள்ளது. தொடர்ந்து நடந்த போர்களால் தண்ணிமுறிப்புக்குளத்திலிருந்து மக்கள் வெளியேறியதால், இதன் அருமையான நீர்ப்பாசனமும் விவசாய முயற்சிகளும் நடைபெறாமல் கிடந்தன.

நாயாற்று நதிப்படுக்கையில் அமைந்துள்ள இந்தக்குளம் நாயாற்றின் முகத்துவாரத்திலிருந்து ஆறுமைல் தூரத்தில் அமைந்துள்ளது. இதன் ஒரு பகுதிக் கிராமம் முற்றாக இடம் பெயர்ந்து போய் இரு தலைமுறைகளைக் கண்டுள்ளது. என்றாலும் இப்போதும் குளத்தின் நீப்பாசனம் சரிவர அமையவில்லை.

முல்லைத்திவு வவுனியா மாவட்டத்தின் மிகப்பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இரண்டு. ஒன்று பாவற்குளம். மற்றது தண்ணிமுறிப்பு. இது பெரிதாக பயன்படாமல் கைவிடப்பட்டிருந்தது. இதன் குளக்கட்டு மூன்று மைல் நீளமானது. இந்தக்குளம் முற்றாக பயன்பட்டால் கடலுக்கும் இதற்கும் இடைப்பட்ட 12000ஏக்கர்விஸ்தீரணமுடைய நிலத்திற்கு பாசனம் செய்யமுடியும்.



தண்ணிமுறிப்புக் குளத்திற்கு அண்மையாக வடக்குத் திசையில் இன்னுமொரு கைவிடப்பட்ட குளம்உள்ளது. ஒரு காலத்தில் தமிழர்களும் சிங்கள மக்களும் கூடி வாழ்ந்த நிலம் அரசியற் காரணங்களால் இரு இனங்களும் பிரிந்து சென்றதால் இந்த இடம் வெறுமையானது. இதுவும் இரண்டு தலைமுறை கடந்த நிலையில் போராட்டக்களமாக மாறியுள்ளது. வண்ணான் ஆற்றுக்கு குறுக்கே அமைந்துள்ள குருந்தூர்க்குளம் இதுவாகும். இவை இரண்டிற்கும் இடையே இன்னுமொரு நீர்த்தேக்கம் இருந்திருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. அப்படியான ஒன்றுடன் இது பெரிய நீர்த்தேக்கமாக இருந்திருக்கும் என பிரித்தானிய ஆய்வாளர்களும் கூறியுள்ளனர்.

குருந்தூர்க்குளம் வடக்கு தெற்காக அமைந்துள்ளது. அதன் கட்டு நீளம் ஒரு மைலாகும். இதன் வடக்குப் புறம் சற்றே நிலத்துடன் சாய்ந்து மணகிண்டா மலையின் நிலத்தோடு இணைகிறது. தென்முனை குருந்தூர் மலைக்கு எதிராக சாய்ந்திருக்கிறது. ஒரு பாரிய நீர் வளம் போருக்குள் சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றன. நாம் இன்னும்கூட அவற்றை மேலும் மோசமாக்கி எமது கவனத்தை நானா நீயா என்கிற வகையில் மோதல் செய்து கொண்டிருக்கிறோம்.

முல்லைத்தீவின் இன்னுமொரு வளம் அதன் நிலம் தோட்டச் சொய்கைக்கு உகந்ததாக இருப்பதுதான் பெருமளவு விவசாயிகள் தமது தோட்டச்செய்கையிலும் ஈடுபடுகிறார்கள். அதிலும் குறிப்பாக மாரிகால மானாவாரிச் செய்கையில் சோளம், நிலக்கடலை, பயறு, உழுந்து போன்றவை ஏராளமாக செய்கை பண்ணப்படுகின்றன.

கேப்பாபிலவு, சூரிபுரம், நாவற்காடு, வற்றாப்பளை போன்ற இடங்களும் இன்னும் கடந்து வள்ளிபுனம், கைவேலி போன்ற இடங்களிலும் இன்றும் பெரிய அளவில் பண்ணைச் செய்கையாளர்கள் இருக்கின்றனர். இவர்களில் சிலர் நவீன முறைகளைக்கையாண்டு சிறந்த பலனைப் பெறுகிறார்கள். இன்றைய சந்தையில் முல்லைத்தீவுக்கச்சான் கடலைக்கு ஒரு புகழ் பரவியுள்ளது.

முள்ளியவளை வள்ளிபுனம் பிரதேசங்களை அடுத்து பெருவனத் தொடர் அமைந்துள்ளது சில இடங்களில் இந்த இயற்கை வனத்தை அழித்து செயற்கையாக



உருவாக்கப்பட்ட தேக்கமர வனம் மிக அழகானதாக காணலாம் இதைவிடவும் முல்லை மாவட்டத்தில்தான் இன்னும் முரளி மரங்களையும் காணலாம். மரங்களுக்கு முல்லைத்தீவு பெயர் பெற்றது இன்றைய நிலையில் மரத்திருடர்களால் வனமும் கொள்ளையடிக்கப்படுகிறது.

ஆன்றிலிருந்து இன்றுவரை இன்னும் கடற்கரையாயினும் சில இடங்களில் தென்னை பயிரிடப்படவில்லை. கடற்கரையோரமாக தென்னை பனை பலா போன்ற மரங்கள் செய்கை பண்ணப்பட்டன. ஆயிரத்து தொளாயிரத்து எண்ணூற்றின் இறுதியில் இந்தப்பகுதிகளில் கணிசமான அளவு மிளகு உற்பத்தி செய்யப்பட்டது. எனினும் சனத் தொகை குறைவாக இருந்தமையாபல் அதற்கான கேள்வி குறைந்தமிருந்தது. அதனால் படிப்படியாக மிளகுச்செய்கை கைவிடப்பட்டதாக தெரிகிறது.

மத்திய வகுப்பாருக்கு பெரும் தென்னந் தோப்புகளுக்கான திட்டமிட்ட காணிகள் சுதந்திரபுரம் தேவிபுரம், அலம்பில் உடுப்புக்குளம் போன்ற பகுதிகளிலும் குமுழமுனை. சேம்மலை போன்ற சிறு காணிச் செய்கையாளர்களும் நட்ட தென்னைகள் இன்னும் செழிப்பாக உள்ளது.

முல்லைத்தீவின் வடக்கே பதினாறு மைல் தொலைவில் கரையோரக்கிராமமான கோரமோட்டைப் பகுதியிலும், தெற்கே குஞ்சுக்குளம் கருநாவல்பற்று ஆகிய இடங்களிலும் மணற்படைக்குக் கீழேயே நீரூற்று உள்ளதால் தென்னம்பிள்ளைகளின் வேர்கள் நீரை எட்டும் முன்பே பட்டுப் போய் விடுகின்றன. பிடிவாதமாக தண்ணீரூற்றி வளர்த்த தென்னை மரங்களும் ஏனைய இடங்களைப்போல செழிப்பாக இல்லை. ஏனைய வான்பயிர்களும் அவ்வாறே.

பனைமரங்களை விதை போட்டால் போதும் அவற்றை பராமரிக்க தேவையில்லை. தாமாகவே அவை வளர்ந்து விடும். எனினும் புளியமரம் போல பதினைந்து இருபது ஆண்டுகள் கழித்தே அவை காய்க்கும். செம்மலை அளம்பில் முல்லைத்தீவு முள்ளியவளை போன்ற ஏனைய இடங்களில் தென்னை செழித்து வளர்ந்தாலும் அவைகளும் இடப்பெயர்வாலும் போராலும் மோசமாக பாதிக்கப்பட்டே வந்தது.

முள்ளியவளை தண்ணீரூற்று, வற்றாப்பளை போன்ற கிராமங்கள் பலாப் பழத்திற்கு பெயர் பெற்றவை. அதுமட்டுமன்றி பாரம்பரிய கலை கலாச்சார ஆவணங்களைப் பேணவும் அவை கைவிட்டுப்போகாமல் பாதுகாக்கவும் அநேக கலைஞர்களும் அண்ணாவிமார்களும் இந்த மண்ணில் இருக்கிறார்கள்.

தற்காலத்தில் தண்ணி முறிப்புக்குளம் புனரமைக்கப்பட்டு ஒருளவு விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அது முழுமையாகவில்லை. குருந்தூர்மலை சர்ச்சைக்குரிய இடமாகவே இன்னும் இருக்கிறது. மணலாற்றுப்பிரதேசம் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து துண்டிக்கப்பட்டு அனுராதபுர மாவட்டத்துடன் வெலிஓயா என்ற பெயரில் தனி மாவட்டமாக மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் அநுராதபுரத்துக்கு ஒரு கடற்கரையும் கிடைத்தது. தமிழர் தாயகப்பகுதியான வடக்கும் கிழக்கும் நிலத்தால் பிரிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவின் பெருமளவு மக்கள் மீன்பிடித் தொழிலாளர்கள். அதுவுமன்றி நீர்கொழும்புப் பகுதிகளிலிருந்து பருவகால மீன்பிடிக்காகவும் மீனவர்கள் இங்குவந்து தங்கியிருப்பார்கள். அக்காலங்களில் இவர்களும் காணிகளை வாங்கி தென்னைச் செய்கையில் ஈடுபட்டார்கள். அவர்களது காலமும் தெங்கு உற்பத்தி சிறந்தது விளங்கியது. எனினும், இன்றைய நிலையில் இந்த வளங்கள் அனைத்தும் பயன்படுத்தத் தவறியிருக்கிறோம்.

பெருமளவான வளங்களை நாசப்படுத்தி விட்டுவிட்டு வெளிநாடுகளுக்கு சென்று விட்ட எமது மக்கள் எமது அரசியல் பலத்தை மட்டுமன்றி வாழ்வாதாரங்களை சிதைத்துவிடுவதை அறியவில்லை. இந்த மாவட்டம் கல்வியால் சிறந்து விளங்குவதாலும் அரச உத்தியோகமே சிறந்தது என்ற நிலையும் உள்ளது. தென்னிந்தியாவில் பட்டப்படிப்பு படித்தவர்கள் நவீன விவசாய முயற்சிகளில் ஈடுபடுவதை பெருமையாக சமூக வலைத்தளங்களில் பதிவிடும்போது நம்மவர்கள் அப்படி இல்லையே என மனம் ஆங்கலாய்க்கிறது.



# வளரும் நாடுகளில் முன்னேற்றத்தை முடக்கும் ஊழல்

ஊழல் என்பது தனிப்பட்ட ஆதாயத்திற்காக ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வது. வளரும் நாட்டின் பொருளாதாரத்தில் ஒட்டுண்ணியாக செயல்படுகின்றது. இது தொலைநோக்கு விளைவுகளைக் கொண்ட ஒரு சிக்கலான பிரச்சினை,

வளர்ச்சியைத் தடுக்கின்றது மற்றும் மிகவும்பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு விகிதாசாரத்தில்தீங்கு விளைவிக்கும். இந்த கட்டுரை வளரும் நாடுகளில் ஊழலின் நயவஞ்சக தன்மை, அதன் பேரழிவு தாக்கம் மற்றும் பிரகாசமான, ஊழலற்ற எதிர்காலத்தை நோக்கிய பாதையை ஆராய்கின்றது.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்



## ஊழலின் பரவலான தன்மை

பலவீனமான நிறுவனங்கள், குறைவான வெளிப்படையான நிர்வாகம் மற்றும் வரையறுக்கப்பட்ட வளங்கள் காரணமாக குறிப்பாக வளரும் நாடுகள் ஊழலுக்கு ஆளாகின்றன. ஊழல்பல்வேறுவடிவங்களில் வெளிப்படும். அவை பின்வருமாறு:

- லஞ்சம் (Bribery): அடிப்படை சேவைகள் அல்லது அனுமதிகளுக்கான கட்டணங்களைக் கோரும் பொது அதிகாரிகள்.
- அபகரிப்பு (Embezzlement): தனிப்பட்ட செறிவூட்டலுக்காக பொது நிதி பயன்படுத்துவதை இது குறிக்கின்றது.
- நேபோடிசம் (Nepotism): வேலை நியமனங்கள் அல்லது ஒப்பந்தங்களில் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு சாதகமாக இருப்பது, மற்றும் அதிகாரத்தில் இருந்துகொண்டு தமது உறவினர்களுக்கு தனிச்சலுகை வழங்கும் முறைகேடு.
- விருப்பவாதம் (Favoritism): தகுதிக்கு பதிலாக தனிப்பட்ட இணைப்புகளின் அடிப்படையில் ஒப்பந்தங்கள் அல்லது உரிமங்களை வழங்குதல்.

இந்த நடைமுறைகள் ஒரு சீரற்ற முறைமையை உருவாக்குகின்றன, முறையான வணிகங்களை சோர்வடையச் செய்வதோடு வெளிநாட்டு முதலீட்டைத் தடுக்கின்றன. டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனலின் ஊழல் புலனாய்வு குறியீடு ஒரு மோசமான படத்தை வரைகின்றது. பல வளரும்நாடுகள்குறைந்த மதிப்பெண்களை பெற்றுள்ளன, இது அதிக அளவு ஊழலைக் குறிக்கின்றது.

## வளர்ச்சியில் முடங்கும் தாக்கம்

வளரும் நாட்டின் பொருளாதாரத்தில் ஊழலின்பாதிப்பினை மற்றும்தாக்கத்தினை மறுக்க முடியாதது:

- குறைக்கப்பட்ட முதலீடு: வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஊழல் நிறைந்த சூழல்கள் குறித்து எச்சரிக்கையாக உள்ளனர். இது உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கத்திற்கான மூலதன பற்றாக்குறைக்கு வழிவகுக்கின்றது.
- வளங்களின் தவறான ஒதுக்கீடு: கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட பொது நிதி தனிப்பட்ட லாபத்திற்காக திருப்பி விடப்படுகின்றது. இது சேவை தரம் குறைவதற்கு வழிவகுக்கின்றது.
- சமத்துவமின்மை மற்றும்வறுமை: பொது சேவைகளை நம்பியிருக்கும் ஏழைகளை ஊழல் விகிதாச்சாரத்தில் பாதிக்கின்றது. இந்த சேவைகள்சமரசம்செய்யப்படும்போது, வறுமை ஆழமடைகின்றது, ஒரு தீய சுழற்சியை உருவாக்குகின்றது.
- தடைப்பட்ட பொருளாதார வளர்ச்சி: ஊழல் நிச்சயமற்ற தன்மையை உருவாக்குகின்றது மற்றும் புதுமைகளை ஊக்கமளிக்க தவறுகின்றது, நீண்ட கால பொருளாதார முன்னேற்றத்தைத் தடுக்கின்றது.

உலக வங்கியின் மதிப்பீட்டின்படி, ஊழல் ஒரு நாட்டின் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து 1மூ வரை குறைக்கலாம். இது வளர்ச்சிக்கான வாய்ப்புகளைத் தவறவிடுவதோடு இருண்ட எதிர்காலத்தை உருவாக்க வழி வகுக்கின்றது.

## பொதுமக்களின் அவல நிலை

ஊழலின் சுமை சாதாரண குடிமக்களின் தலையில் இடிபோல் விழுகின்றது, அவை:

- சேவைகளுக்கான அணுகல் குறைக்கப்பட்டது: நிதி தவறாகப் பயன்படுத்தப்படும்போது, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அத்தியாவசிய சேவைகள் மோசமாகி, பொதுமக்களின் நல்வாழ்வை பாதிக்கின்றது.
- அதிக செலவுகள்: ஊழல் பெரும்பாலும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகளை உயர்த்துவதற்கு வழிவகுக்கின்றது. ஏற்கனவே வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள குடும்ப வரவு செலவுத் திட்டங்களை பெரிதும் பாதகமாக தாக்குகின்றது.
- நிறுவனங்களில் நம்பிக்கை இழப்பு: பரவலான ஊழல் அரசாங்கத்தின் மீது கோபத்தினையும் அவநம்பிக்கையையும் வளர்க்கின்றது, சமூக ஒற்றுமையைத் தடுக்கின்றது மற்றும் முன்னேற்றத்தைத் தடுக்கின்றது.

## ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு பன்முக அணுகுமுறை தேவை:

- நிறுவனங்களை வலுப்படுத்துதல்: வலுவான, சுதந்திரமான நீதித்துறைகள்,

சட்ட அமலாக்க முகவர் மற்றும் ஊழல் எதிர்ப்பு கமிஷன்களை உருவாக்குவது மிக முக்கியமானது.

• வெளிப்படைத்தன்மையை ஊக்குவித்தல்: திறந்த வரவுசெலவுத் திட்டங்கள், தகவல்களுக்கான பொது அணுகல் மற்றும் சுதந்திரமான பத்திரிகை மூலம் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பது அவசியம்.

• குடிமக்களுக்கு அதிகாரமளித்தல்: குடிமக்களுக்கு அவர்களின் உரிமைகளைப் பற்றிக் கற்பித்தல் மற்றும் ஊழலுக்கு எதிராகப் பேசும் கலாச்சாரத்தை வளர்ப்பது இன்றியமையாதது.

• சர்வதேச ஒத்துழைப்பு: சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வதற்கும், சட்டவிரோத நிதிப் பாய்ச்சலைக் கண்காணிப்பதற்கும் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

• தொழில்நுட்ப தீர்வுகள்: மின்-ஆளுமை, ஆன்லைன் கொள்முதல் மற்றும் சொத்து அறிவிப்புகளுக்கான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்தும்.

பூஜ்ஜிய ஊழலுக்கான பாதை நீண்டது மற்றும் கடினமானது. ஆனால் வெற்றிக் கதைகள் உள்ளன. "ருவாண்டா" மற்றும் "பூட்டான்" போன்ற நாடுகள் வலுவான தலைமை, நிறுவன சீர்திருத்தங்கள் மற்றும் பொது ஈடுபாடு ஆகியவற்றின் மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளன.

ஊழல் ஒரு வலிமையான எதிரி, ஆனால் அது வெல்ல முடியாதது அல்ல. ஒரு முழுமையான அணுகுமுறையை மேற்கொள்வதன் மூலம், வளரும் நாடுகள் அதன் கட்டுகளிலிருந்து விடுபடலாம். ஊழலற்ற எதிர்காலம் ஒரு செழிப்பான பொருளாதாரம். மேம்பட்ட சேவை வழங்கல் மற்றும் அனைவருக்கும் செழிப்பில் நியாயமான காட்சியைக் கொண்டிருக்கும் மிகவும் சமமான சமூகத்தை உறுதியளிக்கின்றது. ஊழலை ஒழிப்பது என்பது வெறும் பெட்டியில் டிக் செய்வது மட்டுமல்ல. இது ஒரு தேசத்தின் உண்மையான திறனைத் திறப்பது மற்றும் அதன் அனைத்து குடிமக்களுக்கும், குறிப்பாக மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு பிரகாசமான எதிர்காலத்தை உறுதி செய்வதாகும்.

### ஊழலை ஒழிப்பதில் உள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகள்

ஊழலற்ற எதிர்காலத்தை நோக்கிய பாதை கோட்பாட்டில் தெளிவாக இருந்தாலும் குறிப்பிடத்தக்க சவால்கள் உள்ளன, அவை பின்வருமாறு:

• அரசியல் விருப்பம்: வேரூன்றிய ஊழலைச் சமாளிப்பதற்கு பலம் வாய்ந்த மறைமுக எதிரிகளை எதிர்கொள்வது அவசியம். அது தற்போதைய நிலைக்கு சவால் விடும் வகையில் இருந்தாலும் கூட அரசியல் தலைவர்கள் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு உண்மையாக முன்னுரிமை அளிக்க வேண்டும்.

• பொதுமக்கள் பங்கேற்பு: குடிமக்களின் ஈடுபாடு முக்கியமானது. விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், சீர்திருத்தத்தை வலியுறுத்துவதிலும், தலைவர்களை பொறுப்புக்கூற வைப்பதிலும் சிவில் சமூக அமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

• ஊடக சுதந்திரம்: உண்மையான மற்றும் சுதந்திரமான பத்திரிகை ஒரு கண்காணிப்பாளராக செயல்படுகின்றது. ஊழலை அம்பலப்படுத்துகிறது மற்றும் அதிகாரத்தில் இருப்பவர்களை பொறுப்புக்கூற வைக்கிறது. ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பது அவசியமானது.

• நீண்ட கால அர்ப்பணிப்பு: ஊழலை ஒழிப்பது ஒரு நீண்ட கால செயல்திட்டமாக அமைவதோடு உடனடியாக குறுகிய காலத்தில் இதனை முழுமையாக இல்லாது ஒழிக்க முடியாது. வலுவான நிறுவனங்களையும் ஒருமைப்பாட்டின் கலாச்சாரத்தையும் கட்டியெழுப்ப பல தலைமுறைகளாக நீடித்த முயற்சிகள் தேவை.

### சவால்கள் இருந்தபோதிலும், பல வாய்ப்புகள் முன்னேற்றத்தை துரிதப்படுத்தலாம்:

• தொழினுட்ப கண்டுபிடிப்பு: பிளாக்செயின் தொழில்நுட்பம், பரிவர்த்தனைகள் மற்றும் ஒப்பந்தங்களுக்குச் சேதமடையாத பதிவுகளை வழங்குகின்றது. லஞ்சம் மற்றும் மோசடிக்கான வாய்ப்புகளைக் குறைக்கின்றது.

• தரவு பகுப்பாய்வு: மேம்பட்ட தரவு பகுப்பாய்வு ஊழலின் வடிவங்களை அடையாளம் காண முடியும். மேலும் அதிகாரிகள் தங்கள் முயற்சிகளை மிகவும் திறம்பட குறிவைக்க உதவுகின்றது.

• இளைஞர் ஈடுபாடு: ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான அறிவு மற்றும் கருவிகளைக் கொண்டு இளைஞர்களை மேம்படுத்துவது நீண்ட கால வெற்றிக்கு முக்கியமானது.

அடுத்த வாரமும்...


## தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

### கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# அறிவுப் பொருளாதாரம் - மனிதவள மேம்பாடு

க. அமுதன்

**பொதுவாகப் பொருளாதாரத்தைக் காலவரிசை நோக்கில் மரபுநிலைப் பொருளாதாரம், தொழில்யுகப் பொருளாதாரம், தற்போதைய நவீனகாலப் பொருளாதாரம் எனப் பிரித்து அறியலாம்.**

**இக்காலத்தில் மனித அறிவே பொருளாதாரமாக அமையும் நிலை உருவாகியுள்ளது. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளுக்குப் பல நாடுகளிலிருந்தும் குடியேறிய ஆய்வறிஞர்களால் அந்நாட்டின் பொருளாதார உயர்வு ஏற்றம் பெற்று வருகின்றது. இதன் வழியே வளரும் நாடுகளின் அறிவைத் தம் குடியேற்ற உத்திகளின் மூலம் பெறும் உத்தியை வளர்ந்த நாடுகள் மருத்துவம், ஆய்வு, பொறியியல் துறைகளில் கையாள்கின்றன.**

கற்றவர்கள் எல்லாக் காலங்களிலும் கல்லாதவர்களைக் காட்டிலும் அதிகாரம் மிக்கவர்களாகவே இருந்து வந்துள்ளனர். கற்றவர்க்கு ஆளும் அதிகாரம் எளிமையாகக் கிடைத்து வந்தது. அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும் என்ற புறநானூற்று வரிகளாலும் கல்வியால் வரும் தகுதிச் சிறப்பு போற்றப்பட்டுள்ளது.

வேளாண் பொருளாதாரம், பயிர்த்தொழில் உற்பத்தி குறித்த அறிவாக அமைந்தது. அதன் வளர்ச்சி வணிகப் பொருளாதாரத்தை உருவாக்கியது. வேளாண் விளைபொருள்களின் உற்பத்தியும் வணிகமுமே பொருளாதாரத்தின் நிலைகளாக நீண்டகாலம் அமைந்தன. பொருளாதாரம் நாளடைவில் விளைபொருட்களோடு, எரிபொருள்களான நிலக்கரி, எரி எண்ணெய், உலோகம் (இரும்பு, தங்கம், செம்பு) என்னும் கனிம வளப் பொருளாதார அடிப்படைகளில் விரிந்தது. பின்னர் போக்குவரத்தும், தொலைத்தொடர்பும் வளர்ந்தபின், விளை பொருட்கள், கனிமப்பொருட்கள் என்பவற்றோடு உயர்கல்வியும், தொழில்நுட்பக் கல்வியும் இணைந்து அறிவுப் பொருளாதாரம் வழியாக உலகம் ஒரு குடும்பமாகச் செயல்படத் தொடங்கியுள்ளது. உலகின் ஆறில் ஒரு பங்கு மக்கள் தொகையைக் கொண்டது இந்தியா. இம்மனித வள வாய்ப்பு கொண்ட இந்தியா, கல்வியின் வழி அறிவுப் பொருளாதாரத்தில் மேம்பட்டுள்ளது. இதனால் நாட்டின் பொருளாதார வலிமை அதிகரிக்க உள்ள வாய்ப்புகளை இவ்வலகில் காண்போம்.

### கல்வியும் பொருளாதாரமும்

பண்டைக் காலத்தில் எல்லாச் சமூகங்களிலும் மத குருக்களும், மந்திரிகளும் கற்றவர்களாக இருந்து அரசை வழி நடத்தியதற்கு "அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" என்னும் புறநானூற்று வரிகள் சான்றுரைக்கின்றன. "கல்வியின் மிக்கதாம் செல்வம் ஒன்றில்லையே' என பாவேந்தர் பாரதிதாசனாரும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே கல்வி, எந்நாளிலும் உற்பத்திக்கும் உயர்வுக்கும் நிர்வாகத்திற்கும் அடிப்படையானது என்பது பெறப்படுகிறது.

வாழ்விற்குத் தேவையானது அறிவு. அதனை விசாலமாக்கிப் பயன்மிகுவிப்பது கல்வி எனலாம். உற்பத்தியின் பெருக்கம், பொருள் விற்பனை-வாணிபப் பெருக்கமாக மாறுகிறது. வணிகப் பொருளாதாரமாக மாறி உலக நாடுகளிடையே தொடர்பு நெருக்கம் ஏற்பட்ட பொழுது, விளைபொருள் பற்றிய அறிவும், புவியியல் அறிவும் கல்வியில் இடம்பெற்றன. வேளாண்மை , வாணிபம், போர்க்கலை, மருத்துவம், அரசியல், வானியல் என விரிந்து கொண்டே செல்லும் தேவையையொட்டிப் பரவலாகி வளர்ந்த கல்வி, பொருளியலுக்கு அடிப்படையாகி நாடுகளின் வளத்துக்கு வழிவகுத்தது.

### அறிவுப் பொருளாதாரம் என்பது தான் என்ன?

கடற்பயணக் கண்டுபிடிப்புகளின் தொடர்ச்சியாக, மேற்கத்திய நாடுகளின் பல்வேறு கண்டுபிடிப்புகளினால் உலகின் ஆற்றல் வளங்களைக் கண்டுபிடிக்கும் தீவிரம் வளர்ந்தது. இதனால் இயந்திரக் கண்டுபிடிப்பும், தொழில் நுட்பமும் அறிவுப் பொருளியலின் அடிப்படையாயின. கல்வி, காகித அச்சு செய்வதாகவும் இயந்திரத் தொழில் நுட்பம் அறிவதாகவும் மாறியது. கருத்தியல் கல்வியுடன், தொழிலியல் கல்வியும், தொழில்நுட்பக் கல்வியும், கணிணிக் கல்வியும் உலகளவில் பரவலாயின.

அனைத்துப் பொருளாதார நடைமுறைகளிலும் கல்வியறிவின் தாக்கம் இன்றியமையாததோர் முக்கித்துவத்தைப் பெற்றுவருகிறது. அறிவையே மூலதனமாகக் கொண்டு ஆற்றப்படும் பொருள்செய், நிதிசெய் வாணிப முயற்சிகளைப் படிப்பதே அறிவுப் பொருளாதாரம் (Knowledge Economy) எனப்படுகிறது. பொருளாதாரத்துக்குப் பொருளும் பணமும் அடிப்படையாவதற்கு மேலாகவும் அறிவு அடிப்படையாகிறது என்பதே இப்பொருண்மை .

### பொருளியலாளர்களின் பார்வையில் கல்வி

கௌடில்யரின் அர்த்தசாஸ்திரமும், திருவள்ளுவரின் திருக்குறள் பொருட்பாலும் பொருளியலை அரசின் அங்கமாகக் கொண்டன. ஆடம்ஸ்மித் 'தம் தேசங்களின் வளங்கள்' என்னும் நூலில் கல்வியை அறிவும் திறமையும் பெறுவதற்கான மூலதனம் எனக் குறிக்கிறார்.

"மன்னரும் மாசரக் கற்றோனும் சீர்தூக்கின் மன்னனின் கற்றோன் சிறப்புடையன்- மன்னர்க்குத் தன்தேசமே அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு".- வாக்குண்டாம்- ஔவையார்.

ரிக்கார்டோ என்னும் பொருளியலாளர், எழுதிய மக்களின் பொருளியல் நல்வாழ்வு, மக்கள் தொகையைக் குறைப்பதன் மூலமும், கல்வி மூலதனத்தைப் பெருக்குவதன் வாயிலாகவும் அமையுமென்றார். ஜான்ஸ்டுவர்ட்மில் பொதுமக்கள் பெறும் கல்வி, பெருமை, பொருளியல் முன்னேற்றம், தனியாள் மேம்பாடு ஆகியவற்றை மக்களிடையே உருவாக்கும் என அறிவித்தார். ஆல்பிரட் மார்ஷல் என்பவர் அரசும் பெற்றோரும் இணைந்து தொழிற்கல்வி வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். கார்ல் மார்க்ஸ், தொழிலாளர் வர்க்க ஆட்சியில் தொழில் நுட்பக் கல்வி, கருத்தியல் மற்றும் செய்முறையாகத் தொழிலாளர்களின் பள்ளியில் கற்றுத் தரப்பட வேண்டுமென்றார்.

மற்ற தொழில்களைப் போலவே கல்வியிலும் உள்ளிடு பொருட்களான (inputs) நிலம், கட்டடப்பொருட்கள், நூல்கள், விளையாட்டுப் பொருள்கள், அறிவியல் கருவிகள், ஆசிரியர் தொண்டு ஆகியனவற்றைப் பணம் செலவிட்டுப் பெற வேண்டியவைகளாக அமைத்திருக்கின்றன. எனினும் வெளிப்பாட்டில் கல்வியும், பயிற்சியும், சேவையும் சந்தை விற்பனைப் பொருட்கள் அல்ல என்றார் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா. இன்று தொழிற்சாலை முதலாளிகளைப் போலவே தொழிலில் வல்லுனத்துவம், அனுபவக் கல்வி பெற்றவர்களும் பொருளாதார மேன்மை பெற்றவர்களாக வாழ்கின்றனர். தொழில் வல்லுனர்களின் பாண்டித்யமும், அறிவும் பெரும் தொழிற்சாலைகளின் அடிப்படை மூலதனமாய் அமைகின்றமை கண்கூடு.

### கல்வியின் முன்னேற்றம்

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாகக் கல்வியைப் பொருளாதாரச் சொல்லாட்சியின் வழி ஆய்ந்து பார்க்கத் தொடங்கியுள்ளோம். கல்வி முறையை சமூக வாழ்முறையுடன் இணைத்தல், கல்வியின் முக்கியத்துவத்தைத் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்பாட்டுடன் இணைத்தல், கல்வி மூலாதாரங்களை மறுபகிர்வு

செய்தல், ஒழுங்குப்படுத்துதல், கல்வியைப் பொருளியல் உற்பத்திக்கு உகந்ததாக்குதல், சமூகப் பொருத்தப்பாட்டைத் தரும் கல்வியாக மாற்றுதல், கல்வித் திட்டமிடல் மற்றும் கல்வி மேலாண்மை உத்திகளை மேம்படச் செய்தல் ஆகியன அறிவுப் பொருளாதார வளர்ச்சியின் செயல்முறை உத்திகளாகும். எல்லா நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திலும் அடிப்படைக் கல்வியறிவு தனிப்பெருங் காரணியாக, முதலீடாக, இடுபொருளாக வலியுறுத்தப்படுகிறது.

கல்வியை வெறும் பொருளாதார நோக்கில் மட்டுமே காணுதல் கூடாது. கல்வியின் பயன்களை அளந்தறிய இயலாது. கல்வியறிவால் ஒருவருக்கு ஏற்படும் நன்மைகள் எவை? அவை எங்கு தோன்றி எங்கு முடிகின்றன என்பதை அறுதியிட்டுச் சொல்லிவிட முடியாத பலமுனைத்தாக்கமும், நெடுநாள் பயனும் மிக்கதாகக் கல்வி அமைகிறது. பொருளாதார வரவாகக் கல்வியை நாம் காண்பதைக் காட்டிலும், அறிவு பெறுதல், பண்பாடு, சமூகத்திறன் நன்னடத்தை, நல்வாழ்வு ஆகிய விலை மதிப்பிட இயலாத அரும்பயன்கள் எனக் கல்வியின் மேம்பட்ட பெருமைகள் பலவாகும். எனினும் இந்தியாவிலிருந்து கல்வியும், தொழில்நுட்பமும் கற்ற இந்தியர்களைப் பேரளவில்வெளிநாடுகள்நம்பகமாக வரவேற்கும் நிலை ஏற்பட்டுள்ளமை பெருமைக்குரியதாகும். இந்தியர்களின் பகுப்பொருள் அறிவைப் போலவே தனிமனிதப் பண்பாட்டுக் கூறுகளும், நன்னெறிப் பாங்குகளும் உலக மனிதவளச் சந்தையில் உயரிய இடத்தைப்பிடித்து வருகிறது.

## பொருளாதார வகைப்பாடுகள்

பொதுவாகப்பொருளாதாரத்தைக்காலவரிசை நோக்கில் மரபுநிலைப் பொருளாதாரம், தொழில் யுகப் பொருளாதாரம், தற்போதைய நவீனகாலப் பொருளாதாரம் எனப் பிரித்து அறியலாம்.

1. மரபுநிலைப் பொருளாதாரம்

மனித வரலாறு, உணவு தேடுதல், வேட்டையாடுதல், வேளாண்மை , நெசவு, கைத்தொழில், ஆலைப்புரட்சி, போக்குவரத்து கணினித் தொழில், தகவல் தொடர்பு வளர்ச்சி எனப்பல காலக்கட்டங்களைச் கண்டு வருகிறது. இவற்றில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட வாழ்வுப் பொருளாதாரத்தை மரபுநிலைப் பொருளாதாரம் எனக் குறிப்பிடலாம்.

2. வேளாண் பொருளாதாரம்

உடலுழைப்பையும், கைத்தொழிலையும் மையமாகக் கொண்ட பண்பாட்டு வாழ்க்கையில் வேளாண் உற்பத்திப் பொருளாதாரம் சிறந்திருந்தது. உழைப்பு, கால்நடைகள், நிலம், நீர், காற்று, சூரிய ஆற்றல் ஆகியவற்றை அடிப்படையான வளங்களாகக் கொண்டு இவ்வாழ்க்கை அமைந்திருந்தது. இது உழைப்பை உலகுக்களித்து. இதில் பயன் நோக்கம் அதிகம். இது ஒரு உற்பத்திப்பணி.

3. வணிகப் பொருளாதாரம்

வேளாண் விளை பொருட்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கும், வேறொரு நாட்டிற்கும் தரை மற்றும் கடல்வழியாகக் கொண்டு சென்று வாணிகம் செய்வதால் வரும் வணிகப் பொருளாதாரம் வேளாண் பொருளாதாரத்தின் உச்சகட்ட மாற்றமாக எல்லாச் சமூகங்களிலும் நிலவியது. இது வணிகப் பொருளாதாரம் எனப்பட்டது. இது யூகத்தை அடிப்படையாகக் கொண்டது. இலாப நோக்கம் அதிகம். இது சேவைப்பணி.

4. தொழில் யுகப் பொருளாதாரம்

தொழிற்சாலை உற்பத்திப் பொருட்களான ஆடை, கருவிகள், சரக்குகள் முதலான சந்தை உருவாகத் தேவையான தொழிற்சாலைகளைக் கொண்டிருந்த நாடுகள் பொருளுற்பத்தியில் மிகுந்த நாடாகத் திகழ்ந்தன. இது மற்றவர் உழைப்பை நாடிய முயற்சி. இங்கு தேவைகள் நிறைவேற்றம் பெற்றன. இங்கு ஆக்கத்தைப்போலவே சுரண்டலும் இடம் பெற்றது.

5. கனிமவளப் பொருளாதாரம்

இரும்பு, தங்கம், நிலக்கரி, பாறை எண்ணெய்கள் போன்ற நிலத்தடி கனிம வளங்களைக் அகழ்ந்தெடுக்கும் நாடுகள் தங்கள் வளங்களின் வாயிலாகப் பொருளாதார உயர்வைக் கண்டன. மத்திய கிழக்கு நாடுகள் பெட்ரோலியப் பொருளாதாரத்திரல் உயர்ந்ததை அறிவோம். ஈடு செய்யவியலாவற்றும் வளங்களை இது பயன்படுத்துகிறது. சூழல் மாசு அதிகம், பக்க விளைவுகளும் அதிகம்: ஆக்கம் அறிவு இரண்டுமே இதில் இடம் பெறுகின்றன.

6. தொழில், வாணிபப் பொருளாதாரம்

இயற்கை வளங்களும், கனிமவளங்களும் இல்லாத நாடுகள் வாணிபத்தை மேற்கொள்ளுவதன் வாயிலாகப் பொருளாதாரத்தில் உயர்ந்தன. அவை தொழிற்சாலை உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதன் வாயிலாகப் பெருவளம் பெற்றன. இதனை இங்கிலாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் உயர்வு வழியாகப் புரிந்துகொள்ளலாம்.

7. அறிவுப் பொருளாதாரம் (Knowledge Economy)

இக்காலத்தில் மனித அறிவே பொருளாதாரமாக அமையும் நிலை உருவாகியுள்ளது. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளுக்குப் பல நாடுகளிலிருந்தும் குடியேறிய ஆய்வறிஞர்களால் அந்நாட்டின் பொருளாதார உயர்வு ஏற்றம் பெற்று வருகின்றது. இதன் வழியே வளரும் நாடுகளின் அறிவைத் தம் குடியேற்ற உத்திகளின் மூலம் பெறும் உத்தியை வளர்ந்த நாடுகள் மருத்துவம், ஆய்வு, பொறியியல் துறைகளில் கையாள்கின்றன. பொருளாதார உயர்வைக் கொண்டிருக்கும் நாடுகளின் போக்குவரத்தும், தொலைத் தொடர்பும் உலகளாவி விரிந்துள்ளன. எந்நாட்டிலும் எந்நாட்டினரும் பணியாற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அறிவுப் பொருளாதாரம் உலகளவில் பரந்துவிரியத் தொடங்கியுள்ளது. அறிவுப் பொருளாதாரம் உடலுழைப்பைக் குறைத்து, தொழில் நுட்பங்களையும், உத்திகளையும் அதிகமாகப் பயன்படுத்தி, மக்கள் தொகைமிக்க வளரும் நாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு வளர்ந்த நாடுகள் தம்மை மிக விரைவாக உலக நிதிய மதிப்பில் உயர்த்திக் கொள்ள வழிவகுப்பதாகவும் அமைந்துள்ளது.

8. அறிவு வணிகப் பொருளாதாரம்

இந்தியாவின் மக்கள் தொகை தற்போது 117 கோடி உலகில், ஆங்கிலம்பேசும்ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களில் பெரும்பான்மையாயோர் இந்தியாவில் வாழும் சூழல் காலனியாதிக்கத்தால் நம் நாட்டில் ஏற்பட்ட சூழலாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மக்கள் தொகை எண்ணிக்கையில் இளைஞர்களின்எண்ணிக்கை குறையநம்நாட்டு இளைஞர்கள் ஆங்கிலவழி கணினிகற்று மனிதவளத்தை மேலைநாடுகளில் விற்பனைப் பொருளாக்குகின்றனர். இது தொலைத் தொடர்புகளின் நீட்சியாக, அயலகப்பணி (Out Sourcing) வாயிலாகவும் நடைபெறுகிறது. இப்பணி தாராளமயம், உலகமயமாக்கம், தனியார்மயமாக்கலின் வழி வாகனம், மின் உற்பத்தி, மருந்து, வேளாண்மை போன்ற பலதுறைகளிலும் விரிவடைந்துள்ளது. இதனால் அறிவுசார், மனிதவளம் மிக்க இந்தியா உலக அரங்கில் தம் அறிவு வளத்தை வணிகப் பொருளாக்கி வருகின்றது. எது எப்படி ஆயினும் உடல் உழைப்பு, தொழில்நுட்பம், விழிப்புணர்வு, தனிமனிதப்பண்பு, கட்டுப்பாடு, நன்னெறிகள் இவை அனைத்திலுமே உயர்ந்த, சீரான மனித வளத்தையுடைய நாடுகளே இப்பொருளாதாரப் போட்டியில் வெற்றியுடன் நிலைத்து நிற்க முடியும் என்பது உறுதி.

9. பண்பாட்டறிவுப் பொருளாதாரம்

உலகெங்கும் உடலுழைப்புக் கூலிகளாகக் குடிபெயர்ந்த இந்திய மக்கள் இந்தியப் பண்பாட்டினையும் தம் வாழ்வின் சிறப்பாகவே கொண்டிருந்தனர். இன்றைய அறிவுப் பொருளாதார உலகில் பண்பாட்டின் கூறுகளான நடனம், இசை, நாடகம், இலக்கியம், மருத்துவம், குடும்பப் பிணைப்பு, தனிமனித ஒழுக்கம், மனிதநேயம் என்னும் பல்வேறு கூறுகள் பண்பாட்டு மூலதனமாக உலகெங்கும் இணையம் மற்றும் வாழ்வு வழி, பரிணமித்து வருகிறது. வேற்றுமையுள் ஒற்றுமை கொண்ட இப்பண்பாட்டு வாழ்முறையால் உலகோரைத் தம்பக்கம் மாற்றம் கொள்ளச் செய்வதோடு அமெரிக்க ஐக்கிய நாடுகள் அதற்கு அடிப்படையான இந்தியக் கல்விமுறையைப் பாராட்டுவதையும் இணைத்துக் காணும்போது அறிவுப் பொருளாதார உலகில் நம் நாடு கோலோச்சும் நிலை தொலைவில் இல்லை என்பதை ஊகிக்க முடிகிறது. எனினும் இதன் எதிர்முகத் தாக்கங்களுக்குள் இந்தியா சிக்கிக் கொள்ளக்கூடாது என்பது பற்றியும் நாம் அனைவரும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டியுள்ளது.

# துரித உணவும் துரத்தும் விளைவுகளும்.



லதா கந்தையா



சிறுவயதில் கேட்கும் கதைகளிலே ஒரு அழகான தேவதை வருவாள். அவள் தன்னைஅறிமுகப்படுத்தும் போது இரக்கம் மிக்கவளாக, பணி உடையவளாக, கவர்ச்சி மிக்கவளாக காட்டிக் கொள்ளுவாள். அந்த அறிமுகம் காரணமாக அவள் மீது மிகுதியான ஈர்ப்பு வரும்.

இயல்புக்கு அதிகமாகவே வசீகரித்து கொள்வாள். வசீகரத்தோடு சுவை பொருந்திய பேச்சும் சுவை நிறைந்த செயல்களாலும் கவர்ந்து தனக்குள் புதைத்துக்கொள்வாள். இதை அன்பு, பேரன்பாக மகிழ்ந்து, வரவேற்று, தன்னை உலகில் கிடைத்த ஒரு அட்சய பாத்திரம் போல நெக்குருகி காதலிக்க வைப்பாள்.

அந்த தேவதையால்வசீகரிக்கப்படும்போது சுற்றுச்சூழலிலே கலகலப்பு நிறைந்திருக்கும். பசுமைகள் நிறைந்திருக்கும். வனப்புகள் நிறைந்திருக்கும். பறவைகள் பாடும். தேன்கனிகள் பல காய்த்து குலுங்கும். ஆனால் தேவதையால் வசீகரிக்கப்பட்ட நிலையில் இயற்கையின் இன்பங்களில் இருந்து விலகியே நிற்க வைக்கும். அவள் தரும் பானங்கள் அமிர்தம் ஆகும் .

அவர் தரும் உணவுகள் சொர்க்கமாகும். அவளின் உபசரிப்பிலேயே மயங்கி, இயற்கையில் இருந்து விலகி ,அந்த மாய அழகி தரும் பானங்களும் உணவுகளுமே மயங்க வைக்கும்.

மயக்கம் முற்றிய நிலையில் தனக்குள்ளே அவள் சிறைப்பிடித்துக் கொள்ளுவாள். இயற்கையின் வனப்புக்களில் இருந்து இயற்கையின் சக்திகளில் இருந்து விடுபட்டிருந்தவர்களால் அவள் சிறைப்படுத்திக் கொண்ட சிறையில் இருந்து வெளிவருவது கடினமாகிவிடும். அவளிடம் இருந்து மீண்டு வர முடியாதபடிக்கு சிறை பலமடைந்திருக்கும். சற்று விழித்து மீண்டுவிட ஆவலோடு விழித்துக் கொள்ளும் போது அவள் ஒரு. மாய மந்திர கிழவி ஆகிவிடுவாள். அந்த சூனியக்கிழவி வனப்புகள் மிக்க இயற்கை இருட்டாகிக்கொள்ளுவாள். இருட்டில் தவிக்க வேண்டிய நிலை ஏற்படும். அவள் தந்த உணவு,

பானமெல்லாம் நஞ்சென உணரும் போது வாழ்கையே சூனியமாகி இருக்கும். அவள்தந்த பானங்களைக்கூட பருக முடியாது. அவள்தந்த கவர்ச்சியான உணவுகளைக்கூட சாப்பிட

முடியாதபடிக்கு சூனியக் கிழவி இருளையும் ஏற்படுத்தி சித்திரை வதைப்படுத்துவாள். அவளிடமிருந்து தப்பிக்க முடியாதபடிக்கு அவள் பலரை கடித்து குதறி தின்றுவிட்ட எச்ச எலும்புகள் சிதறி கிடக்கும். அரிதிலும் அரிதானவர்களே தப்பித்து விடுவார்கள். அவர்கள் ஒரு வகையில் புத்திசாலிகளாகவோ இளவரசர்களாகவோ இளவரசிகளாகவோ கதைகளிலே காட்டப்பட்டிருக்கும். இப்படித்தான் துரித உணவுகள் கவர்ச்சி மிக்கவையாக, கவர்ச்சிகரமான

விளம்பரங்களால் ஆடம்பரங்களால் மாடமாளிகைக்குள்ளே வசிப்பவையாக ஈர்ப்பவையாக காட்சிப்படுத்தப்பட்டு அவற்றை நாடவைக்கும். நாளடைவில் அவற்றின் சுவையாலும்,

இலகுவான முறையில் கிடைக்குது என்ற காரணத்தினாலும், அந்த இடத்துக்கு போவது ஒரு பெருமை மற்றும் பகட்டு என்பதாலும், நேரவிரயமில்லை என்ற சோம்பேறிக்காரணங்களாலும் அந்த மாயவலை இளவரசியாக வரவேற்று சூனியக்கிழவியின் சூனியம் போல பயங்கரமாக அமைந்துவிடும். இந்த அனர்த்தத்திற்குள் பணக்காரர்கள் ஓரளவு பணத்தால் சிகிச்சை பெற்று தப்பித்துக்கொள்கிறார்கள். ஏழைகள் பலிக்கடா ஆகிவிடுகிறார்கள். துரித உணவுகள்( Fast food) உட்கொள்வதனால்.

1.உடற்பருமன் ஏற்படும்.

2.நீரிழிவு நோய் ஏற்படும்.

3.உயர் இரத்த அழுத்தம் ஏற்படும்.

4.இருதய நோய்களை உண்டாக்கும்

5.சிறுநீரகத்தை பாதிப்படைய செய்யும்.

6.கல்லீரலை பாதிப்படையச் செய்யும்.

7.பார்வை குறைபாட்டை ஏற்படுத்தும்.

8.ஊட்டச்சத்து குறைவான உணவாக இருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கிறது.

9.ஞாபக சக்தி குறைவை ஏற்படுத்துவதால் கல்வியை ஒழுங்காக கற்க முடியாது வேலைகளை சரிவர செய்ய முடியாது.

10. தொடர்ச்சியான தலைவலியை ஏற்படுத்தும்.

11. உயிரணுக்களில் பாதிப்பை ஏற்படுத்தே மலட்டு தன்மையை உருவாக்கும்.

இவ்வாறான அறிகுறிகளை உள்ளடக்கி யாழ்ப்பாண மக்களை ஓரளவு ஒப்பீடு செய்து பார்த்தால் இன்று உடற்பருமன் என்பது பாரியதொரு நெருக்கடியாக காணப்படுகிறது .நகர்ப்புற பாடசாலை மாணவர்களில் 100 பேருக்குள் உடற்பெருமனை ஆராயின் 50 மாணவர்கள் உடற்பெருமனால் துண்டாடுபவர்களாக காணப்படுவார். நகர்ப்புற பெண்கள் மட்டுமின்றி கிராமங்களை உள்ளடக்கிய பெண்களும் இப்பொழுது வீட்டில் பெண்களுக்கு முன்னரே போல மனித வலுவை பயன்படுத்தி இயங்கக்கூடிய அரைத்தல் இடித்தல் குத்துதல் போன்ற செயற்பாடுகள் குறைந்து காணப்படுவதனால் இப்போதைய பெண்கள் உடற்பெருமன் கூடியவர்களாக காணப்படுகிறார்கள்

தமிழர் பொருணமியம்
வாரமலர்
TAMILS ECONOMY



பெண்களுக்கு மட்டுமின்றி ஆண்களையும் அபகரித்து உள்ளது. ஆண்களில் பல வாகனம் ஓட்டுபவர்களாகவும் வாகன இயக்கங்களில் பயணிப்பவர்களாகவும் ஒரே இடத்தில் அமர்ந்து பணி செய்பவர்கள் என்ற வகையிலும் உடற்பெருமன் உடையவர்களாக காணப்படுகிறார்கள் நடைப்பயிற்சி குறைந்தவர்களாக காணப்படுகிறார்கள். யாழ்ப்பாணத்தில் பெரும்பாலானவர்கள். மாதம் மாதம் பரிசோதனை எலிகளாக நீரிழிவு நோய் புற்றுநோய் இருதய நோய் சிறுநீரக நோய் பார்வை குறைபாடு மலட்டுத்தன் என சிகிச்சை பெரும் வீதம் அதிகரித்து காணப்படுகிறது பலர் மருந்து உணவாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

துரித உணவுகள் ( Fast food) உட்கொள்வதனால்.

1.உடற்பருமன் ஏற்படும்.

2.நீரிழிவு நோய் ஏற்படும்.

3.உயர் இரத்த அழுத்தம் ஏற்படும்.

4.இருதய நோய்களை உண்டாக்கும்

5.சிறுநீரகத்தை பாதிப்படைய செய்யும்.

6.கல்லீரலை பாதிப்படையச் செய்யும்.

7.பார்வை குறைபாட்டை ஏற்படுத்தும்.

8.ஊட்டச்சத்து குறைவான உணவாக இருப்பதால்

நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கும்.

9.ஞாபக சக்தி குறைவை ஏற்படுத்துவதால் கல்வியை ஒழுங்காக கற்க முடியாது. வேலைகளை சரிவர செய்ய முடியாது.

10. தொடர்ச்சியான தலைவலியை ஏற்படுத்தும்.

11. உயிரணுக்களில் பாதிப்பை ஏற்படுத்தி, மலட்டு தன்மையை உருவாக்கும். பெண்களுக்கு மட்டுமின்றி ஆண்களையும் பீடித்துள்ளது. ஆண்களில் பலர் வாகனம் ஓட்டுபவர்களாகவும் வாகன இயக்கங்களில் பயணிப்பவர்களாகவும் ஒரே இடத்தில் அமர்ந்து பணி செய்பவர்கள் என்ற வகையிலும் உடற்பருமன் உடையவர்களாக காணப்படுகிறார்கள்.

சாதாரணமாக விறகுகொத்துதல், முற்றம் கூட்டுதல், தண்ணீர் அள்ளுதல் போன்ற செயற்பாடுகளும் இவர்களிடமில்லை. நடைப்பயிற்சி குறைந்தவர்களாக காணப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் பெரும்பாலானவர்கள். மாதம் மாதம் பரிசோதனை எலிகளாக நீரிழிவு நோய், புற்றுநோய், இருதய நோய் , சிறுநீரக நோய், பார்வை குறைபாடு, மலட்டுத்தன்மை என விதம்விதமான சிகிச்சை பெரும் வீதம் அதிகரித்து காணப்படுகிறது. பலர் மருந்தையே

உணவாக உட்கொண்டு வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஒரு நோயாளிச் சமுதாயம்,

சோடை போன சமுதாயம், யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து வதைப் படுத்துகின்றது.

மட்டுமின்றி,, பொதுச் சுகாதாரத்தை பேணாத மனநிலையுடையவர்களாக மாறியதன் காரணத்தாலும் யாழ்ப்பாண மக்கள் நோயாளி சமுதாயமாக மாறி வருகின்றனர். வடிகால்களை பராமரிக்க முடியாதவர்களாக , திண்மக்கழிவுகளை முறைப்படி வெளியேற்றத்தெரியாதவர்களாக, அதவற்றை சரியான சட்டதிட்டங்களோடு செயற்படுத்தும்தலைவர்கள் இல்லாததாலும், சுற்றுச்சூழலை பாதுகாக்க கூடிய மனப்பாங்கு அற்ற மக்களாகவும். அன்றாடம் வாங்கும் விற்கும் பொருட்களை சுத்தமாகவும் சுகாதாரமும் விற்கவோ வாங்கவோ தெரியாத மக்களாகவும் காணப்படுவதால் சுற்றுச்சூழலையும் கொடுத்து தமது ஆரோக்கிய வாழ்வையும் கெடுத்துக்கொள்கிறார்கள். மண்ணிலே

பாவித்த பாவிக்கப்படுகின்ற அதிகளவான கிருமி நாசினிகள் மற்றும் அமோனியா, சல்பேற், யூரியா, பொட்டாசியம் போன்ற இரசாயன கழிவுகளால் மண் வளத்தை இழந்துள்ளது.

இதனால் இங்கு விளைகின்ற விவசாய பயிர்களில் அதிகளவு இரசாயன கிருமி நாசினி சுவரல் மக்களின் உணவாகி, இரத்த அழுத்தம் ,புற்று நோய்க்கு காரணமாக உள்ளது.

மட்டுமின்றி தண்ணீர் சுத்தமற்றுப் போகின்றது. அதிகளவான விடுதிகள், மண்டபங்கள், சுற்றுலா பயணிகளின் வருகை, வேலைக்காக வந்து தங்கியிருப் போர் , யாழில் நிறைந்துள்ள இராணுவத்தினரின் மலக்கழிவுகள் , பூர்வீகமாக இருப்போரின் இனப்பெருக்கம். அவர்களின் மலக்கழிவுகள் என அத்தனை மனித மலமும் நிலத்தின் கீழே நன்னீருடன் / யாழ்ப்பாண நிலைத்தடி நீரோடு கலந்து நீரின் வளத்தை மாசடைய செய்கின்றது இதனால் சிறுநீரகம் தொடர்பான நோய்கள் தொற்றுக்கள் உருவாகியுள்ளன.

நீரை அருந்துவதை விட சோடா அருந்துதல், பால் பாக்கெட் பால் நுகர்வு, மது அருந்துதல், குளிர்பானங்களை அருந்துதல், விலை குறைவான சுத்திகரிப்பு நீர் விற்பனை, போத்தல் நீர் விற்பனை என இந்த யாழ்ப்பாணம் குடிநீரை பதப்படுத்திய நீராகவே அதிகம் உள்ளெடுப்பதால் இயற்கைச்சத்துக்களை இழந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பறக்க நினைத்து, அதிக பேராசைப்பட்டு யாழ்ப்பாணத்தவர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நலன் தொடர்பில் அக்கறையோடு இருந்த வர்களுக்கும் ஆரோக்கிய கேட்டை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இன்னும்போதிய விழிப்புணர்வு ஏற்படாது விட்டால் ஒரு கட்டத்தில் இலங்கையில் அதிகம் மாசடைந்த நிலப்பரப்பாக இது மாறக்கூடும். மாசடைந்த மண்ணில் எந்த விளைவுகளும் ஆரோக்கியமாக இருக்கப்போவதில்லை

# உற்பத்தி திறனை அதிகரிக்க உதவும் 10 வழிகள்.

திருமதி.ஞானரூபன்
தலைவர்,
ஞானம் குழுமம்,
தொழில் முயற்சியாண்மை வழிகாட்டல் நிறுவனம்.



ஒரு நிறுவனத்தின் உற்பத்தி வெளியீட்டை அதன் உள்ளீடு அலகுகளால் வகுக்க கிடைப்பது உற்பத்தித்திறன் ஆகும்.

உற்பத்தித் திறன் என்பது ஆங்கிலத்தில் 'productivity' எனக் குறிப்பிடப்படுகிறது.

நாடுகள், நிறுவனங்கள் ஒரு குறிப்பிட்ட உள்ளீட்டைக் கொண்டு எவ்வளவு உற்பத்தியை உண்டாக்குகிறார்கள் என்பதை மதிப்பிடுகிறது உற்பத்தித் திறன். இங்கே உற்பத்தி திறனை அதிகரிக்க உதவுகின்ற பத்து வழிமுறைகளை பார்ப்போம்.

1. சரியான திட்டமிடல் :

ஒரு நாளை துவங்கும் முன், சரியான திட்டமிடல் அவசியம். அன்றைய தினத்திற்குள் முடிக்க வேண்டிய வேலைகள் என்னென்ன என்பதை வரிசையாக பட்டியலிட வேண்டும்.

2. இடைவெளி அவசியம் :

வாழ்க்கை - வேலை சமநிலையை பாரமரிக்க உரிய இடைவெளி எடுத்து கொள்ளுதல் அவசியம். நீங்கள் உணவைத் தவிர்க்கும் அளவுக்கு உங்கள் வேலையில் மூழ்கிவிடுவது எளிது அல்லது நீங்கள் சோர்வடையும்வரை கவனம்செலுத்துங்கள். சிறிது நேரம் ஓய்வெடுத்த பின்னர் திரும்புகையில், வேலையில் கவனம் செலுத்த உதவும்.




3. ஆரோக்கியமான சமச்சீர் உணவு :

ஊட்டச்சத்துமிக்க உணவு வகைகள் எடுத்து கொள்ள முன்னுரிமை அளிப்பது உடலுக்கு ஆற்றலை அளிக்கும். வெறும் வயிற்றுடன் யாரும் வேலை செய்ய முடியாது. மாலை நேரங்களில் எடுத்து கொள்ளும் நொறுக்குதீனிகள் கூட ஆற்றலை அதிகரிக்க உதவலாம்.

4. தினமும் ஒரு இலக்கை நிர்ணயிங்கள்:

குறிப்பிட்ட லட்சியத்தை அடைய, அன்றாடம் ஒரு இலக்கை நிர்ணயித்து கொள்ளுங்கள். தினமும் அடைய வேண்டிய இலக்கை, சிறு பகுதியாக மாற்றி கொள்ளுங்கள். அதனை குறிப்பிட்ட நேரத்திற்குள் உங்களால் முடிக்க முடியும்.

5. சமூகவலைதளம் வேண்டாம் :

பல அலுவலகங்களில், பணியாளர்கள் தங்களது வேலைநேரங்களில் சமூகவலைதளங்கள் பயன்படுத்த தடை உள்ளது. சமூகவலைதள பயன்பாடு, நேரத்தை வீணடித்து கவனத்தை சிதறடிக்கலாம்.

6. சுய விருப்பத்தை வளருங்கள்:

ஒரே மாதிரியான வேலையை தொடர்ந்து செய்வதால் ஏற்படும் சோர்வு, உற்பத்தி திறனை பாதிக்கலாம். உங்களை புதுப்பித்து கொள்ள மிகவும் பிடித்தவற்றை அது புத்தகம் அல்லது பத்திரிகை படித்தல், மற்ற ஏதோ ஒன்றை பின்பற்ற வேண்டும்.

7. உடற்பயிற்சி மறக்க வேண்டாம் :

தினமும் காலையில் 30 நிமிடங்கள் முதல் 45 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வது இதயம் தொடர்பான பாதிப்புகளில் இருந்து உங்களை விலக்கி வைக்கும். மேலும் உங்களை அன்றைய தினம் ஆற்றல்மிக்கவராக உணர வைக்கும்.

8. காலக்கெடு நிர்ணயம் செய்யுங்கள்:

முக்கியமான வேலையை முடிக்க உங்களுக்கு குறிப்பிட்ட காலக்கெடுவை நீங்களே நிர்ணயித்து கொள்ளுங்கள். ஒரே ஒரு இலக்கை நிறைவேற்ற, அதிக நேரத்தை செலவிட கூடாது.

9. காலை உணவை தவிர்க்க வேண்டாம் :

சமச்சீரான காலை உணவை தவற விட வேண்டாம். காலை உணவு உண்ட பின்பே, உடல் கவனத்துடன், விழிப்புடன் செயல்பட முடியும். காலை உணவை தவிர்த்தால், உடல் மந்தத்துடன், வேலையிலும் உரிய கவனம் செலுத்த முடியாமல் போகலாம்.

10. ஒரே நேரத்தில் பல வேலை வேண்டாம் :

உங்கள் அனைத்து வேலைகளையும் முடிக்க, ஒரே நேரத்தில் வேலை செய்வது சரியான வழி போல தோன்றலாம். ஆனால் உண்மையில், உங்கள் முழு உற்பத்தி திறனை வெளிகொண்டு வர உதவுவதற்கு பதில், தடையாக இருக்கும்.

# வறட்பசியிலும் பயன் தரும் பயறு

பூரணி

**துவரை, கொள்ளு, உளுந்து, பாசிப்பயறு, தட்டை, சோயாமொச்சை போன்றவை பயறு வகைப் பயிர்களாகும். பயறு வகைப் பயிர்களில் வேர்முடிச்சுகள் மூலமாக ஆகாயத்தில் உள்ள தழைச்சத்து கிரகிக்கப்பட்டு நிலத்தில் சேர்க்கப்படுவதால் நிலவளம் மேம்படுகிறது.**

பயறு வகைகள் பொதுவாகக் குறுகிய கால வயதுடையவை. அதிகப் பாசன நீர் தேவைப்படாதவை. பயறு வகையில் அதிக அளவில் புரதச்சத்து இருப்பதால் உடல் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன. பயறு வகைச் சாகுபடியில் சராசரியாக ஒரு ஏக்கருக்கு 544 கிலோ மகசூல் பெற முடியும். ஒரு ஏக்கரில் 800 கிலோ மகசூல் எடுக்கப் பல்வேறு திட்டங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### பயறு வகையின் சிறப்பம்சங்கள்

துவரை, கொள்ளு, உளுந்து, பாசிப்பயறு, தட்டை, சோயாமொச்சை போன்றவை பயறு வகைப் பயிர்களாகும். பயறு வகைப் பயிர்களில் வேர்முடிச்சுகள் மூலமாக ஆகாயத்தில் உள்ள தழைச்சத்து கிரகிக்கப்பட்டு நிலத்தில் சேர்க்கப்படுவதால் நிலவளம் மேம்படுகிறது.

பயறு வகைப் பயிர்களின் இலைகள் நிலத்தில் உதிர்வதால் மண்ணில் அங்ககப் பொருள் அதிகரிக்கிறது. குறைந்த நாளில், குறைந்த செலவில் அதிக வருவாய் கிடைக்கிறது. இப்பயிர் கால்நடைகளுக்குப் புரதம் நிறைந்த தீவனமாகவும் வயலுக்குப் பசுந்தாள் உரமாகவும் பயன்படுகிறது.

### மகசூல்குறைவுக்கான காரணங்கள்

வளமற்ற நிலத்தில் சாகுபடி செய்தல், பெரும்பாலும் மானாவாரியில் சாகுபடி செய்வது, குறைந்த உற்பத்தித் திறன் கொண்ட ரகங்களைப் பயிர் செய்தல், தரம் குறைந்த விதைகளைக் கொண்டு சாகுபடி செய்தல், சீரிய சாகுபடித் தொழில்நுட்பங்களை முழுமையாகக் கடைப்பிடிக்காமை ஆகிய காரணங்களால் பயறு வகைப் பயிர் சாகுபடியில் மகசூல் குறைகிறது.

### உற்பத்தி பெருக்கத்துக்கான வழிமுறைகள்

1. பருவத்துக்கேற்ற உயர் விளைச்சல் தரும் ரகங்களைத் தேர்வு செய்து சாகுபடி செய்ய வேண்டும்.

2. உயிர் உர விதை நேர்த்தி - ரைசோபிய நுண்ணுயிர்க் கலவையைக் கலந்து விதைப்பது பயிருக்கும் மண்ணுக்கும் நல்லது தருவது மட்டுமின்றி விளைச்சலையும் 30 சதவீதம்வரை அதிகரிக்கச் செய்யும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெறுவதற்கு இது ஒரு நல்ல வழியாகும்.

3. பரிந்துரைக்கப்பட்ட பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க வேண்டும். இவ்வாறு பயிர் செய்யும்போது செடிகளுக்கிடையே இடம், சூரிய ஒளி, நீர், உரம் ஆகியவற்றிக்காக நெருக்கடி இல்லாமல் நன்றாக வளர்ந்து, நிறைந்த மகசூல் உண்டாகும்.

4. உரிய காலத்தில் களை நிர்வாகம் மேற்கொள்ளுதல் மிகவும் அவசியம்.

5. முறையான நீர் நிர்வாகம் மேற்கொள்ளுதல் அவசியம். விதைத்தவுடனும் மூன்றாம் நாளும் நீர் பாய்ச்ச வேண்டும், தேவைக்கேற்ப 10-15 நாட்களுக்கு ஒரு முறையும், பூக்கும் பருவத்திலும் காய்ப்பிடிக்கும் பருவத்திலும் பாசனம் அவசியம் தேவை. நீர்த் தேங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

6. பூக்கள் உதிர்வதைத் தடுக்க ‘பிளோனோபிக்ஸ்’ வளர்ச்சி ஊக்கியைப் பூக்கள் தெரிய ஆரம்பித்தவுடன் ஒரு முறையும் 15 நாட்கள் கழித்து மறுமுறையும் தெளிக்க வேண்டும்.



### விதை நேர்த்தி

ஒரு கிலோ பயறு வகை விதைக்கு 4 கிராம் ‘ட்ரைகோடெர்மா விரிடி’ உயிர் பூஞ்சாணம்



கலந்து 24 மணி நேரம் வைத்திருக்க வேண்டும். இதனால் விதை மூலம் பரவும் நோய்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

### உயிர் உர நேர்த்தி

ஒரு ஏக்கருக்குத் தேவையான 8 கிலோ விதையுடன், 1 பொட்டலம் (200 கிராம்) ரைசோபியம், 1 பொட்டலம் பாஸ்போபேக்டீரியா ஆகியவற்றை 500 மி.லி. ஆறிய கஞ்சியில் கலந்து நிழலில் உலர வைத்து விதைக்க வேண்டும்.

### நுண்ணூட்டமிடுதல்

ஒரு ஏக்கருக்கு 60 கிலோ ஜிப்சத்தை அடியுரமாக இட வேண்டும். இதனால் மகசூல் அதிகரிக்கிறது. 2-கிலோ பயறுவகை நுண்ணூட்டத்தை விதை விதைத்த பின் மணலுடன் கலந்து சீராகத் தூவ வேண்டும்.

ஒரு ஏக்கரில் ‘புளுகுளோரலின்” 200 மி.லி. களைக்கொல்லியை 250 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 3-ம் நாள் தெளிக்க வேண்டும். இதன் மூலம் களையைக் கட்டுப்படுத்த முடியும்.

இறவைப் பயிருக்கு 4 அல்லது 5 முறை பாசனம் தர வேண்டும். வளர்ச்சிப் பருவம், பூக்கும் நிலை, காய்பிடிக்கும் நிலையில் கண்டிப்பாக நீர் பாய்ச்ச வேண்டும். இந்தக் காலத்தில் வறட்சி ஏற்பட்டால் மகசூல் பெரிதும் பாதிக்கும்.

பயறு வகைச் சாகுபடியில் டி.ஏ.பி. தெளித்தல் ஒரு முக்கியப் பணி. இதனால் பூ உதிர்வது பெரிதும் கட்டுப்படுத்தப்படுகிறது. விதைத்த 30 மற்றும் 45-வது நாளில் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ டி.ஏ.பி. உரத்தை 100 லிட்டர் நீரில் கலந்து ஒரு நாள் ஊற வைத்துக் காலையில் தெளிந்த நீரை மட்டும் வடிகட்டி கைத்தெளிப்பான் மூலம் இலைகளில் நன்கு படுமாறு, மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும்

# தொழில் முனைவோர்

**ஒரு புதிய வியாபாரத்தை உருவாக்கி அதனை வளர்ச்சியடைய செய்வதில் அந்த தொழில்முனைவோர் பல பொறுப்புகளையும், இடர்பாடுகளையும் சந்தித்து தாக்குப்பிடித்து பிழைத்தால்தான் கணிசமான இலாபத்தையும் குறிக்கோளையும் அடைய முடியும். வாடிக்கையாளர்களும், வியாபாரிகளும், அரசு ஊழியர்களும் கூட நிர்வாகத் திறமை மீது ஆர்வமாக உள்ளனர் என்பது நிதர்சனம்.**

க . கலைவாணி

பொதுவாக தொழில் முனைவோர்என்ற பதமானது, பொருட்கள்அல்லது சேவைகளை வழங்கி அதன் மூலம் மதிப்புகளை உருவாக்கி சந்தையில் தனக்கென உரிய வாய்ப்பிடத்தை அமைத்து கொள்பவரைக்குறிக்கிறது. தொழில் முனைவோர் சந்தை வாய்ப்புகளைக் கண்டறிந்து தமது மூலதனத்தைத் திறம்பட பயன்படுத்துகிறார்.

தொழில் முனைவோர் என்பவர் ஒரு நிறுவனத்தை உருவாக்குபவர் என்பதும் அந்த நிறுவனத்தை உருவாக்கச் செய்யும் வழி முறைகள் தான் "நிர்வாகத் திறமை" என்பதையும் அறியலாம்.

"நிச்சயமற்ற சூழ்நிலையில் புதிய மற்றும் மேலான வழிகளின் மூலம் நல்ல முடிவு எடுக்கும் திறமையின் மூலம் செயல்படுவதையே நிர்வாகத்திறமை என்று D.C. McClelland வரையறுத்துள்ளார்.

"வடிவமைத்தல்மற்றும்செயலாக்குதலில் பொறுப்பேற்று இடர்பாடுகளை யூகித்து வியாபார யுத்திகளை கையாண்டு ஒரு வியாபாரத்தை ஆரம்பிப்பதுதான் நிர்வாகத் திறமை" என்று Encyclopedia Britannica வரையறுக்கின்றது.

"முன்னோக்கு பார்வையுடன் முதலீடு மற்றும்உற்பத்தி வாய்ப்புகள், நிறுவனத்தை ஒழுங்க செய்து புதிய தயாரிப்பு செயல்முறை, முதலீட்டை பெருக்குதல், வேலையாட்களை கூலிக்கு அமர்த்துதல், மூலப்பொருட்களை கொணர்தல்மற்றும்நிறுவனத்தின்அன்றாட வேலைகளை கவனித்து நிர்வகிக்கும் மேலாளர்களை நியமித்தல் என்பது ஒரு நிர்வாகியின் வேலை" என்று ஊநெதெயஅலை உபைபளை வரையறுத்துள்ளார்.

**தொழில்முனைபவர்என்பவர்யார்?**

* சொந்தமாக ஒரு நிறுவனத்தை உருவாக்கி, வளர்ச்சியடைய செய்யும் நபர். .
* நிச்சயமற்ற சூழ்நிலையில்கணிசமான இடர்பாடுகளையும், ஆபத்துகளையும் மேற்கொண்டு தனது இலக்கை அடையும் நபர்.
* புதுமைகளை உருவாக்குபவர்/ மேற்கொள்பவர்.
* கவனத்துடன்கூடிய விடா முயற்சியை தொடர்ந்து செய்பவர்.
* உறுதியான உந்துதலுடன் தனித்தன்மையை பிரதிபலிப்பவர்.
* நிரந்தரமாக மேலான செயல்பாடுகளை செயல்படுத்த முயல்பவர்.
* இயந்திர வாழ்க்கையையும் / மீண்டும் மீண்டும் மேற்கொள்ளும் வேலைகளையும் வெறுப்பவர்.
* கடினமான சவால்களையும் / வாழ்க்கையையும் எதிர்கொள்ள தயாராக இருப்பவர்.

**தொழில்முனைவோரின் வேலைகள்**

* சந்தை வாய்ப்புகளை உணர்ந்தவர்.
* குறைந்த ஆதாரங்கள்/வளங்களில் ஆதிக்கம் செலுத்தி இலாபம் அடைபவர்.
* நிறுவனத்திற்குள் பணிபுரியும் மனித உறவுகளை மேலாண்மை செய்பவர்.
* பொருட்களை சந்தைபடுத்துபவர்.
* போட்டிகளை சந்திக்க செவிசாய்த்து செயலாக்கம் கொடுப்பவர்.
* அரசு துறையினரிடம் தொடர்பு வைத்திருப்பார்.
* நிதியை நிர்வகிப்பவர்
* செயல்முறைகளை மேம்படுத்தி, பொருட்களின் தரத்தை உயர்த்துபவர்.
* வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவன தயாரிப்பு பொருட்களை விற்பனை செய்யும் விற்பனையாளர்களின் உறவுகளை நிர்வகித்தல்.
* புதிய உற்பத்தி முறை மற்றும் பொருட்களை அறிமுகப்படுத்துதல்.

• இடர்பாடுகளையும் ஆபத்துக்களையும் சந்திக்கும் மனப்பாங்கு

* நிறுவனத்தை ஒழுங்கு செய்தல் மற்றும் நிர்வகித்தல்.

**தனித்தன்மை வாய்ந்த தொழில் முனைவோரின் குணங்கள்**

* சாதித்து காட்ட வேண்டிய அத்தியாவசியம்
* உயர்ந்த ஆற்றலுக்கான அத்தியாவச் தேவை
* தனித்தன்மை
* ஆபத்தான / இடர்பாடுகளான முடிவுகளை எடுக்கும் இயல்பான குணம்.
* தற்காலத்தைய நவீன சுயதோற்றம்.
* ஆதரவை பெரும் செயல்பாடுகள்
* வியாபார ஸ்தாபனர்
* தலைமை பொறுப்பேற்றல்
* பொறுமையுடன் கூடிய உறுதியான மனப்பாங்கு
* தலைமையின் ஞானத்தை வெளிப்படுத்தும் செயல்பாடுகள்
* போட்டி மனப்பான்மையை வெளிப்படுத்தும் மனப்பாங்கு
* செயல்பாடுகளுக்கு சுய பொறுப்பேற்றல்

• எதிர்காலத்தை நோக்கி இணைத்து பயணித்தல்

• எதிர்ப்புகளிலும் நிலையான இடத்தை தக்க வைக்கும் முனைப்பு

* ஒரு நிலைமையை வாய்ப்பாக மாற்றும் தன்மை

**தொழில் முனைவோர்களின் உந்து சக்தி காரணிகள்**


• கல்வியின் பிண்ணனி
* தொழில் அனுபவம்
* தனித்து செயல்படும் எண்ணம்
* உற்பத்தி துறையில் ஈடுபடும் எண்ணம்.
* குடும்ப பின்னணி
* அரசு உதவி
* நிதி நிறுவனங்களின் உதவி
* தொழிற்நுட்பம்மற்றும்மூலப்பொருட்கள் கிடைக்கும் தன்மை
* லாபத் தொகை வரையறை

• சுய பொறுப்பு ஏற்றுக் கொள்ளும் எண்ணம்.

• எதிர்கால நடைமுறை சாத்தியக் கூறுகளை எதிர்பார்த்தல்

ஒரு நல்ல தொழில் முனைவோரின் குணங்கள் McClelland கருத்திலிருந்து...

* அசாதாரண அரிய படைப்பாற்றல்
* ஆபத்தையும் இடர்பாடுகளையும் பற்றி கவலைப்படாமல் இயங்கும் இயல்பு குணம்




* சாதிக்க தேவைப்படும் உறுதி Prof. Tandon கருத்திலிருந்து...

• ஆபத்துக்களை யூகிக்கும் திறமை.
• தொழில் அறிவு மற்றும் மாற்றத்திற்கு மாறும் மனப்பாங்கு
• ஆதாரங்களையும்/வளங்களையும் சரியான முறையில் வகைபடுத்தி வழிநடத்துதல்
• ஒழுங்குபடுத்தி நிர்வகிக்கும் திறமை.

என்கின்ற சகல வரையறை கொள்ளும் தன்னை உட்படுத்தி கொள்பவராக இருக்கிறார்.

தொழில் முனைவோர் ஐந்து வகைப்படுவர்.

புதுமைகளை உருவாக்கும் தொழிற்முனைவோர்கள்

அதிரடி பரிசோதனை செயல்பாடுகளில் தீவிரமும் மற்றும் கவனிக்கத்தக்க சாத்தியங்களை நடைமுறை படுத்தும் புத்திசாலித்தனம்.

மற்றவர்களின் பாணியை தத்து எடுத்துக் கொண்டு பின்பற்றி முன் உதாரணத்தை கடைபிடிக்கும் தொழில்முனைவோர்கள்

நல்லநடைமுறைகளைபின்பற்றுவார்கள். இவ்வகை தொழில்முனைவோர்கள்புரட்சிகர மாணவர்கள் என்று கருதப்படுவதால் அதிகம் தேவைப்படுபவர்களாகவும் இருக்கிறார்கள்.

### காரிய நீட்டிப்பு / தொழில்முனைவோர்கள்

இவ்வகை தொழிற் முனைவோர்கள் அதிக கவனத்துடனும், ஆபத்தில் சிக்கிக் கொள்ளக்கூடாது என்கிற மனப்பான்மையுடன் செயல்படுவதால், நிறுவனத்தின் மாறுதல்களை தவிர்த்து செயல்படுபவராக உள்ளனர்.

### தள்ளிப்போடும் மனப்பான்மையுள்ள தொழில்முனைவோர்

உற்பத்தி முறையில் மாற்றம் ஏற்படுத்துவதால் நஷ்டம் ஏற்படும்.

கட்டாயத்தின் காரணமாக தொழில் முனைவோரானவர்கள்

கால சூழ்நிலை காரணமாக கட்டாயப்படுத்தப்பட்டு தொழில்முனை வோர்கள் ஆனவர்கள்.

தொழில்முனைவோர் தலைமையின் தேவைகள்

தொடர்ச்சியான தொழில்முனைவோர் தலைமையும், பொருளாதார வளர்ச்சியும் அடித்தட்டு சமூகத்தினரையும், சமூக தொழில் முனைவோரையும் இணைத்து, மனித வள ஆற்றலை பெருக்கி அவர்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலையில் நேர்மறை மாற்றத்தை உருவாக்கும். இவைகளை கீழ்காணும் நடைமுறையில் சாதிக்கலாம்.

* பாலின பாகுபாடுகளை போக்கி நெறிமுறைபடுத்துதல்.

• குறு தொழில் முனையம் மற்றும் தொழில் முனைவோரின் திறமைகளை வளப்படுத்துதல்
• மக்களுக்கு தொழிற்கல்வியில் பயிற்சி அளித்து மேம்படுத்துதல்
• ஏழைகளின் சுய கண்டுபிடிப்பு பொருட்களுக்கு பூலோக குறியீட்டோடு காப்புரிமை பெற பதிவு செய்து பொருதாளாரத்தை கவனித்தல்.
• பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆரோக்கியம் மேம்படுத்துதல் - குடிநீர், சுகாதாரம் இடம்பெறும்

* இயற்கை ஆதாரங்கள் உட்பட கிராமப்புற வளங்களை நிர்வகித்தல்
* குறிப்பிட்ட வளங்களையும் ஆதாரங்களையும்கொண்டகுழுவினர்களின் திறனை அதிகரித்தல்

• தொடர் இணைப்பு அடிப்படை நடவடிக்கையின் மூலம் உலக மாற்றத்தை ஏற்படுத்துவது.
• சேவை நோக்கில் குழுமங்களுக்கு குறு நிதி அளித்தல்

### தொழில்முனைவோர் தலைமையில் மூன்று நிலைபாடுகள்

* வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வியாபார எண்ணங்களை (பொருட்கள்/சேவைகள்) கண்டறிதல்/சந்தை வாய்ப்புகளை அங்கீகரித்தல்
* இருக்கும் வளங்களையும் / ஆதாரங்களையும் கொண்டு இடர்பாடான வாய்ப்புகளை சாதகமாக்க வழி நடத்துதல்.
* உந்தும் தன்மை கொண்ட வியாபார எண்ணங்களை செயல்படுத்தும்படி நடைமுறை வியாபாரத்தை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை உருவாக்குதல்.

### திட்ட அடையாளம் காணுதல்

நிபந்தனையும் புள்ளி விவரங்களையும் சேகரித்து, தொகுத்து, பகுத்தாய்ந்து தொழில் தொடங்குவதற்கான பலமான வாய்ப்புகளை அடையாளம் கண்டு வாய்ப்புகளை வளர்ச்சியடைய செய்வது தான் திட்ட அடையாளம் காணுதல் எனலாம். வியாபார எண்ணத்தின் மூலம் வாய்ப்புகளை உறுதியான பொருளாகவும் அல்லது சேவையாகவும் மாற்றினால் பெரும் லாபத்தை அடையலாம். இது மதிப்பை உருவாக்கும் செயலாகும். ஒருவரின் சுய எண்ணத்தையும் பிறரது எண்ணத்தையும் வளர்த்துபெருக்கி ஒரு புதிய நல்ல எண்ணத்தை படைக்கலாம். புதுமைகளை உருவாக்குதலின் மூலமும் வியாபார எண்ணத்தின் தேடல் மூலமும் வாய்ப்புகளை அடையாளம் காண முடியும்.

# வீட்டுத் தோட்டத்தில் பீற்றூட் வெற்றிகரமாக வளர்க்க

யேமிகா பொன்னுத்துரை
விவசாய பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**பீட்ரூட்டை நறுக்கி பச்சையாக எலுமிச்சை சாற்றில் கலந்து உண்டுவர இரத்தத்தில் சிவப்பணுக்கள் உற்பத்தி அதிகமாகும். பீட்ரூட்டை பச்சையாக உண்பதன் மூலம் நம் உடலில் இருக்கும் செல்களுக்குப் போதுமான அளவு ஃ போலிக் அமிலத்தின் சத்து கிடைக்கிறது**



இயற்கையாக விளையக்கூடிய காய்கறிகள் அனைத்தும் உடலுக்கு ஆற்றலை அளிப்பதோடு எவ்வித நோய் தாக்கத்தையும் மக்களுக்கு ஏற்படுத்தாது. கடைகள் மற்றும் சந்தைகளில் இயற்கையாக விளைவிக்கப்பட்ட காய்கறிகள் என்ற அறிவிப்புப் பலகை வைத்திருந்தாலும் நம்ப முடியாது. இயற்கை காய்கறிகள் வாங்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் நாம் நினைக்கும் நேரங்களில் கிடைக்குமா? என்பது கேள்விக்குறி தான். இதற்கான ஒரே தீர்வு வீட்டுத் தோட்டம் தான். நாம் நினைக்கும் காய்கறிகளை இயற்கையாகவே விளைவித்து நினைத்த நேரங்களில் அறுவடை செய்து சமைத்து சாப்பிடலாம்.

பீற்றூட் மலைநாட்டு குளிர்ச்சியான பிரதேசங்களில் வளரக் கூடியது. எல்லா விவசாய சூழலியல் வலயங்களிலும் இதனை வளர்க்கலாம். பீற்றூட் என்பது ஒரு வகைக் கிழங்கு வகையாகும். இந்த பீற்றூட் கிழங்குகள் சிகப்பு அல்லது நாவல் நிறம் உடையவை. இதைத் தமிழில் செங்கிழங்கு அல்லது அக்காரக்கிழங்கு என்றும் குறிப்பர். பீற்றூட்டை வேக வைத்தும், வேக வைக்காமல் பச்சையாக உண்ணவும் மற்றும் ஊறுகாய் போடவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் இலைப்பகுதியை கீரையாகவும் கால்நடை தீவனமாகவும் பயன்படுத்தலாம்.



### பீற்றூட் பரிந்துரைக்கப்பட்ட வர்க்கங்கள்

கிரிம்சன் குளோபல்

70-90 நாட்களில் அறுவடையை பெற்றுகொள்ளலாம். சிவப்பு கலந்த ஊதா நிறம் கோள வடிவம்

டெட்ராய்ட் டார்க் ரெட்

70-90 நாட்களில் அறுவடையை பெற்று கொள்ளலாம். சிவப்பு கலந்த ஊதா நிறம் கோளவடிவம்

### பீற்றூட் வீட்டில் வளர்க்கும் முறைகள்:

பீற்றூட் செடியை வீட்டில் வளர்க்க வேண்டும் என்றால் முதலில் உரம் மற்றும் கரிமப் பொருட்களால் செறிவூட்டப்பட்ட மண்ணை கொள்கலனில் நிரப்ப வேண்டும். இதற்கு போதுமான அளவு நீர்வடிப்புள்ள சேதனப்பொருட்கள் அடங்கியுள்ள மண் தேவைப்படும். மண்ணின் ிஉ வீச்சு 6.3-7.3 ஆகும். குறைந்த வளத்துடன் மண்ணில் செழித்து வளரக்கூடிய செடியாக இருந்தாலும் 6.5 மற்றும் 7 இடையே pH அளவு தேவைப்படுகிறது. இதை சரிபார்த்துக்கொண்ட பின்னதாக ஒரு கொள்கலின் மண்ணை நிரப்பி வைக்கவும். இதன் பின்னதாக பீற்றூட் விதைகளை தோராயமாக 3/4 அங்குல ஆழத்தில் விதைத்து ஒரு அடி இடைவெளியில் வைக்கவும். குறிப்பாக இதன் வெப்பநிலை 10°C முதல் 29°C வரை இருந்தால் மட்டுமே விதைகளை விதைப்பது நல்லது.



மேலும் பீற்றூட் விதைகளை நடும் போது வேர் வளர்ச்சிக்கு போதுமான இடம் அளிக்க வேண்டும். விதைகளை நட்டவுடன் பீற்றூட்டை சூரிய ஒளி படும் படி வைக்க வேண்டும். சூரியனின் பிரகாசமான கதிர்கள் படும் போது செடிகள் செழித்து வளரும் என்பதால் சூரிய ஒளி அதிகமாக இருக்கும் இடங்களில் வைக்கவும். நட்டி வைத்த விதைகள் நாற்றுகளாக மாற 5 முதல் 8 நாட்களுக்குள் முளைக்கும். இவை சுமார் 4 முதல் 5 அங்குல உயரத்தை அடைந்தவுடன் மாற்றி வேறு இடத்தில் நட்டி வைக்கவும். இல்லையென்றால் ஜாடியை கொஞ்சம் இடைவெளி விட்டு வைக்கவும். வீட்டில் நட்டி வைத்த பீற்றூட் செடிகள் 1-3 அங்குல விட்டம் வரை வளர்ந்து வந்தவுடன் அறுவடை செய்ய வேண்டும். குறிப்பாக அறுவடை செய்யும் போது செடியின் வேர்கள் சேதப்படாமல் இருக்க வேண்டும் என்றால், அவற்றைச் சுற்றியுள்ள மண்ணைத் தளர்த்தி, பீற்றூட்டை மெதுவாக வெளியே இழுத்தால் போதும். இயற்கையான மற்றும் ஆரோக்கியத்தைத் தரக்கூடிய பீற்றூட்டை வீட்டிலேயே அறுவடை செய்து சாப்பிடலாம்.

## பீற்றூட் சாகுபடி முறை பயிர்ச்செய்கை

பீற்றூட் சாகுபடி செய்ய கடினவகை நிலத்தை தவிர்க்க வேண்டும். மிகவும் குறைந்த வெப்பநிலையை தாங்காது. ஆகையால் 10 °C மேல் வெப்பநிலை இருக்குமாறு சாகுபடி செய்ய வேண்டும். மண்ணில் கார அமிலத்தன்மை 6-7 ஆக இருக்க வேண்டும். மலைப்பகுதியில் வருடம் முழுவதும், தரைப்பகுதியில் குளிர் காலங்களிலும் சாகுபடி செய்யலாம். 5-6 மப ளநநனள ஃாய விதை தேவைப்படுகிறது. நிலத்தை நன்றாக உழுது பண்படுத்தி, உக்கிய சேதன உரத்தினை பாத்திகளில் இடல் மண்ணினை தொற்று நீக்கம் செய்ய பூச்சி கொல்லி சூரியவெப்பம் அல்லது கருக்கிய வைக்கோலை பயன்படுத்துவது முக்கியம் விதைகளை 10 செ.மீ வரிசைகளுக்கு இடையிலான இடைவெளியில் நடல். நிலத்தினை 30 செ.மீ அழம் வரை உழுது 1 மீ அகலம் மற்றும் 20 செ.மீ உயரத்திற்கு மேடை அமைத்தல் வேண்டும்.

4-6 கிழமையின் பின் நாற்றுகளை மீள் நடுகை செய்யலாம். வேர் நீளமாகும் நேரத்தில் கிரமமான முறையில் நீர்பாசனம் செய்தல். பொதுவாக 3-4 நாள் இடைவெளியில் நீர் பாசனம் செய்தல் வேண்டும். மீள் நடுகை செய்து 2 வாரங்களின் பின் களை கட்டுப்பாடு செய்தல். மேல்கட்டு பசளை இடுவதற்கு முன் களை அகற்றவும். களைகள இடை பயிர் கலாச்சார முறைகளால் அகற்றப்படும். பொதுவாக வேர் அழுகல்நோயும், இலைப்புள்ளி நோயும் தாக்கும். விதைகளுக்கு சூடான நீர் பரிகரணம் பரிந்துரைக்கப்பட்ட பங்கசு நாசினி மண்கொசெப், மனேப், கார்பென்சாசிம், குளோரோதலோனல் நாற்று நட்டு 75-90 நாட்களில் அறுவடை செய்யலாம்.. அறுவடை செய்யும் போது நிலம் மிதமான ஈரப்பதத்துடன் இருக்க வேண்டும். பருவமழை பொழியும் இந்த குளிர்காலத்தில் முறையாக விதைநேர்த்தி செய்தால் 12-20 வஃஃாய வரை பீற்றூட் விளைச்சல் கிடைக்கும்.

## பீற்றூட்டின் பயன்கள்

பீற்றூட்டில் தண்ணீர்சத்து, புரதச்சத்து, இரும்பு, நார்ச்சத்து கல்சியம், மக்னீசியம், சோடியம், பொஸ்பரஸ், வைட்டமின் ஏ மற்றும் சி, மற்றும் பொட்டாசியம் போன்ற நிறைய கனிமச்சத்துகள் நிறைந்துள்ளன. பீற்றூட்டை பிழிந்து சாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டு வர அல்சர் குணமாகும். கிட்னியில் சேர்ந்துள்ள தேவையற்றவைகளைப் போக்கிவிடும் தன்மை கொண்டது. தீப்பட்ட இடத்தில் பீட்ரூட் சாறைத் தடவினால் தீப்புண் கொப்புளமாகாமல் விரைவில் ஆறும். சோர்வு, தளர்ச்சி போன்ற உடல் சார்ந்த கோளாறுகளில் இருந்து புத்துணர்ச்சி பெற பீட்ரூட் சீரான முறையில் உதவுகிறது.


பீட்ரூட்டை நறுக்கி பச்சையாக எலுமிச்சை சாற்றில் கலந்து உண்டுவர இரத்தத்தில் சிவப்பணுக்கள் உற்பத்தி அதிகமாகும். பீட்ரூட்டை பச்சையாக உண்பதன் மூலம் நம் உடலில் இருக்கும் செல்களுக்குப் போதுமான அளவு ஃ போலிக் அமிலத்தின் சத்து கிடைக்கிறது. மஞ்சள் காமாலை போன்ற வியாதிகள், மற்றும் வாந்தி, பேதி போன்ற உணவு மண்டல கோளாறுகளுக்கு பீட்ரூட் நல்ல பலன் தரும். பீற்றூட்டின் விசேஷம் அதன் இனிப்பு சுவைதான். மற்ற காய்கறிகளை விட அதிக சர்க்கரை இதில் உள்ளது. பீற்றூட் சாப்பிடுவதால் வயிற்றுப்புண், மலச்சிக்கல் கட்டுப்படும். கொழுப்பைக் குறைத்து, இதயக் கோளாறுகளைத் தடுத்து ரத்த ஓட்டத்தைச் சீராக்கும் தன்மையும் பீட்ரூட்டுக்கு உண்டு. எலும்பு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதுடன், கல்லீரலில் உள்ள நச்சுத்தன்மையையும் இது வெளியேற்றுகிறது. இப்படி பீற்றூட் கிழங்கின் அருமைகளைப் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம்.

பொதுவாகச் சமைக்கும்போது காய்கறிகளின் சத்து குறைந்துவிடும். ஆனால் பீட்ரூட்டைச் சமைக்கும்போதும், அதன் சத்து குறைவதில்லை. மருத்துவக் குணம் கொண்ட அதன் இலைகளிலும் காயில் உள்ள சத்து நிறைந்திருப்பதால், கீரையைப் போல் இலைகளைச் சமைத்துச் சாப்பிட மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.



# பணக் கஷ்டத்தால் மன அழுத்தமா?

இந்த உலகத்தில் பெரும் பாலான மக்களுக்குப் பணக் கஷ்டம் தவிர்க்க முடியாத விஷயமாக இருக்கிறது. பணக் கஷ்டத்தால் பலரும் மன அழுத்தத்துக்கு ஆளாகிறார்கள். மன அழுத்தம் அவர்களின் மொத்த வாழ்க்கையையும் பாழாக்கிவிடுகிறது. இப்படியான நிலைக்கு உள்ளாகாமல், மகிழ்ச்சியாக வாழ்க்கையை அமைத்துக்கொள்வது எப்படி என்பதைச் சொல்லித் தருகிறது 'நோ வொரிஸ்' (No Worries) எனும் புத்தகம். இந்தப் புத்தகத்தை அமெரிக்காவில் வசிக்கும் ஜேரட் டில்லியன் (Jared Dillian) எழுதியுள்ளார்.




"நீங்கள் பணக்காரராவது எப்படி என்பதைச் சொல்லும் புத்தகம் இதுவல்ல. அதுபற்றிச் சொல்ல பல புத்தகங்கள் இருக்கின்றன. நான் பணம் சார்ந்த தொழிலில் இல்லை. மகிழ்ச்சியாக இருப்பது எப்படி என்பதைச் சொல்வதே என் வேலை. இந்தப் புத்தகம் போகிற போக்கில் பணம் சம்பாதிப்பது குறித்து பேசுமே தவிர, பிரதான நோக்கம் அதுவல்ல" என்று சொல்லி ஆரம்பிக்கிறார் ஆசிரியர்.

பணக் கஷ்டத்தால் உருவாகும் மன அழுத்தத்தை (ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ்) குறைப்பது எப்படி என்பதைச் சொல்வதே இந்தப் புத்தகத்தின் நோக்கம்.

இந்த உலகில் பல கோடி பேர் பணக் கஷ்டத்தால் உருவாகும் மன அழுத்தத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். நடு இரவில் தூங்காமல் விழித்துக்கொண்டிருக்கும் அவர்கள், இந்த மாதத்துக்கான வீட்டு வாடகையை எப்படிக் கொடுக்கப்போகிறோம், கடனுக்கு இந்த மாதம் கட்ட வேண்டிய தவணையை எப்படி செலுத்தப் போகிறோம், வாங்கிய கடன் தொகை இப்போது வட்டிபோட்டு எக்கச்சக்கமாக ஆகிவிட்டதே, கிரெடிட் கார்ட் பில் தொகையைக் கட்டச் சொல்லி ஓயாமல் போன் செய்கிறார்களே என்பது போன்ற பல்வேறு பணம் சார்ந்த கவலைகளில்தான் உழன்றுகொண்டிருக்கிறார்கள்.

இதனால் அவர்கள் சுலபமாகவும் விரைவாகவும் பணம் சம்பாதிக்க வழி ஏதாவது இருக்கிறதா என்று தேட ஆரம்பிக்கிறார்கள். அதிக வட்டி எனும் ஆசை வார்த்தைகளில் சிக்கி ஏமாற்று திட்டங்களில் இருக்கிற பணத்தையும் போட்டுவிட்டு மோசம்போகிறார்கள், அல்லது பங்குச் சந்தையில் மோசமான பங்குகளை (Penny stock போன்ற) வாங்கி, அதை விற்கவே செய்யாமல், என்றாவது ஒரு நாள் விலை ஏற்றமடையும் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி மேலும் மேலும் தவறான முடிவுகளை எடுத்து தங்களுடைய பணக் கஷ்டத்தையும், அதனால் வரும் மன அழுத்தத்தையும் அதிகரித்துக் கொள்ளவே செய்கின்றனர்.

ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ் என்பது திருமணம், குழந்தைப்பேறு, வேலை போன்ற விஷயங்களில் உருவாகும் ஸ்ட்ரெஸ் போலவே அதிகரித்துக்கொண்டே போகும் குணாதிசயம் கொண்டது.

இதனால், காலப்போக்கில் இது நம்முடைய வாழ்க்கையை மிகவும் கடினமானதாக ஆக்குகிறது. பணக் கஷ்டத்தால் உருவாகும் ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ் என்பது தேவையற்ற ஒன்று. சொல்லப்போனால் தவிர்க்கக்கூடிய ஒன்று. ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ்

இல்லாமலேயே நாம் வாழ முடியும். அதற்கு நம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம்.

பணம் இல்லாதவர்களுக்குதான் இந்தப் பிரச்னையா என்றால், பணம் இருப்பவர்களுக்கும் ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ் என்பது இருக்கவே செய்கிறது. நம்புவதற்கு கடினமான விஷயம்என்றாலுமே இதுதான் நிஜம். பணக்காரர் ஆவது என்பது உங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துமே தவிர, ஃபைனான்ஷி யல் ஸ்ட்ரெஸில் இருந்து விடுவிக்காது.

நம்மில் பெரும்பாலானோர் அதிகம் பணம் சம்பாதிப்பதே ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ் இல்லாமல் இருப்பதற்கான வழி என நினைத்துக்கொண்டிருக்கிறோம். இது தவறு. ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ் இல்லாமல் வாழ நாம் எப்படி நம்முடைய நிதி விவகாரங்களை அமைத்துக் கொள்கிறோம் மற்றும் நம்முடைய பணம் குறித்த அணுகுமுறை எப்படி இருக்கிறது என்ற இரண்டு விஷயங்கள்தான் நம்முடைய ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ்ஸைக் குறைக்கும் காரணிகளாக இருக்கின்றன" என்று சொல்லும் ஆசிரியர், இவை குறித்துத் தெளிவாக விளக்கியுள்ளார்.

பணம் குறித்த அணுகுமுறை என்றால் என்ன..? ஓர் உதாரணத்தின் மூலம் விளக்கினால் அது புரியும். கற்பனையாக... வரலாற்று பேராசிரியர் ஒருவரை எடுத் துக்கொள்வோம். ஸ்மார்ட்டான நபர். பி.ஹெச்.டி படித்துள்ளார். பல்வேறு போட்டித் தேர்வுகளில் எல்லாம் சிறப்பான மதிப்பெண் பெற்றுள்ள பன்முகத் திறமையாளர் அவர்.

பேராசிரியர் பணி அல்லாமல் வெவ் வேறு துறைகளில் வேலை பார்த்தால் எக்கச்சக்கமான பணம் சம்பாதிக்க வாய்ப் பிருந்தும் அவர் ஏன் பேராசிரியராக மட்டுமே இருக்கிறார். எவையெல்லாம் இதற்குக் காரண மாக இருக்கும்? அவருக்கு வரலாறு பிடித்திருக்கலாம். கார்ப்பரேட் நிறுவனத்துடன் ஒப்பிடும்போது குறைவான வேலை, குடும்பத்துடன் செலவிட போதுமான நேரம், ஓரளவுக்கு ஃப்ளெக்ஸிபிள் வேலை நேரம் போன்றவை அவருக்குப் பிடித்திருக்கலாம்.

பணத்தின்மேல்பெரிய ஆசை இல்லாமல் இருக்கலாம். பணம் என்பது ஒருவருடைய சாய்ஸ். நம் அனைவருக்குமே எவ்வளவு பணம் இருந்தால் நாம் மகிழ்ச்சியாக இருப்போம்என்பது நம்ஒவ்வொருவருடைய விருப்பத்தைப் பொறுத்ததுதான் இல்லையா?

தனிப்பட்ட நிதி குறித்து பேசும்போது பலரும் ஒன்றைச் சொல்ல கேட்டிருப்பீர்கள். உங்களிடம்பணம்சேர வேண்டுமென்றால், அன்றாட வாழ்க்கையில் நாம் மிகவும் டிசிப்ளினுடன் எல்லா விஷயங்களையும் அணுக வேண்டும். பணம் குறித்த சின்னச் சின்ன விஷயங்களில் நீங்கள் எடுக்கும் சரியான நடவடிக்கைகளே உங்களிடம் பணத்தைக் கொண்டு வந்து சேர்க்கும் என்பார்கள்.

ஆனால், இது எல்லோருக்கும் ஏற்றதாக இருப்பதில்லை. தேநீர் குடிக்காமல் காசு சேர் என்பார்கள். இவையெல்லாம் சாத்தியமே இல்லாத விஷயம். கொஞ்ச நாள்கள் இருப்பீர்கள். அப்புறம் வாழ்க்கையில் தேநீர் கூட இல்லாமல் என்னத்தைக் கண்டோம் என்று ஆரம்பித்துவிடுவீர்கள். ஏனென்றால், இப்படி காசு சேர்ப்பது மிகவும் கடினமான ஒரு விஷயம். தேநீர் குடிக்க வேண்டும் என்று நினைத்தால் குடித்துவிட வேண்டும். ஒரே ஒரு வாழ்வில் கிடைக்கும் சின்னச் சின்ன லக்ஸரிகளை அனுபவிக்கத் தவறாதீர்கள். தேநீர் கூட குடிக்காமல் கடுமையாகச் சேமிக்கும் பழக்கத் தைக் கொண்டு வாழ்ந்து காசு சேர்த்து கடைசி காலத்தில் என்ன செய்யப்போகின்றீர்கள் என்று சிந்தியுங்கள்.

பணம் குறித்த பெரிய நடவடிக்கைகளை நீங்கள் சரியாகச் செய்தால் மட்டுமே நீங்கள் பணம் குறித்த கவலை இல்லாது இருக்கலாம் என்பதுதான் சரி. வீட்டுக் கடன், கார் கடன், படிப்புக்கான கடன் போன்றவற்றை சரியான முறையில், சரியான அளவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கையில் இருக்கிற பணத்தைச் சரியாக, அஸெட் அலொகேஷன் முறையில் டைவர்சிஃபை செய்து வந்தால் போதும். நீங்கள் அன்றாடம் குடிக்கும் தேநீரின் எண்ணிக்கையை குறைக்க வேண்டிய கட்டாயம் வராது. மேலே சொன்ன விஷ யங்களில் கோட்டை விட்டுவிட்டால்தான் உங்களுடைய பணம் குறித்த அனைத்து நடவடிக்கைகளுமே தவறாகப் போகும் வாய்ப்பு உருவாகும். கூடவே ஸ்ட்ரெஸ ஸம் உருவாகும்.

எப்படி பெரிய நிதி குறித்த முடிவுகளை சரியாக எடுப்பது என்பீர்கள். ஒருவருக்கு எதனால் ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ் வருகிறது என்ற கேள்விக்கு உங்களுடைய பதில் என்னவாக இருக்கும்? கடன் மற்றும் ரிஸ்க் என்ற இரண்டும் தானே காரணமாக இருக்கும் என்பீர்கள்.

நான் நியூயார்க்கில் வசித்து வந்தேன். 13 வருடங்களுக்கு முன் நான் சௌத் கரோலினா வுக்குக் குடிபெயர்ந்தேன். நியூயார்க்கிலும், சௌத் கரோலினாவிலும் பலரிடமும் (பெயின்டர், விருந்தோம்பல் சேவையில் பணிபுரிவர், கட்டடப் பணியாளர் போன்றவர்களிடம்) ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ் குறித்து உரையாடியபோது இந்த இரண்டு இடங்களில் வசித்த நபர்களுமே பொதுவான சில விஷயங் களையே கூறினார்கள். அவர்கள் அனைவருக் கும் பணம் குறித்த பயம் என்பது ரொம்பவுமே இருந்தது.

இன்னும் சொல்லப்போனால் இரண்டு இடங்களில் வசிப்பவர்களுக்கும் ஒரே அளவிலான பயம் இருந்தது எனலாம். கடன் குறித்தும் ரிஸ்க் குறித்தும் அவர்கள் கவலை கொண்டிருந்தனர்.

கடனும் ரிஸ்க்குமே ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ்ஸுக்கான காரணிகள். கடன் ரிஸ்க் என்பது நீங்கள் வீடு வாங்கும்போதும், கார் வாங்கும்போதும், கல்விக் கட்டணத்தை தவணையாக செலுத்தும்போதும், அல்லது கிரெடிட் கார்டுகளை உபயோகிக்கும்போதும் உருவாகிற ஒன்றாகும். ரிஸ்க் ஸ்ட்ரெஸ் என்பது நீங்கள் முதலீடு செய்யும்போது உருவாகிறது. ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ்ஸை சரி செய்ய தவறான கடன்களைத் தவிர்த்தும், சரியான ரிஸ்க்குகளை எடுத்தும் வாழ வேண்டும். அவ்வளவுதான்.

உங்கள் வாழ்வில் மூன்றே தரு ணங்களில் தான் நீங்கள் பணம் பற்றி பெரியதாகக் கவலை கொண்டிருப்பீர்கள். அவை என்னென்ன? வீட்டுக் கடன் வாங்கும் போது, கார் கடன் வாங்கும்போது மற்றும் கல்விக் கடன் வாங்கும் போது என்ற மூன்று தருணங்கள்தான் அவை. இதைத் தவிர, மற்ற தருணங்களில் நீங்கள் பெரிய அளவில் பணம் குறித்து கவலை கொள்ளப் போவதில்லை" என்று சொல்லும் ஆசிரியர், இந்தப் புத்தகத்தை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரித்து எழுதியுள்ளார்.

முதல் பகுதி பணம் குறித்த நம்முடைய அணுகுமுறை குறித்து விளக்குகிறது. இரண்டாவது பகுதி பணத்துடனான உறவை எப்படி சரியாக வைத்துக்கொள்வது என்பதை விளக்குகிறது. மூன்றாவது பகுதியில் ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ்ஸை எப்படி நிர்வகிப்பது (முக்கியமாக கடன் சார்ந்தவற்றை) மற்றும் எப்படி அதைக் குறைப்பது என்பது குறித்து விளக்குகிறது. நான்காவது பகுதி ரிஸ்க் சார்ந்த ஃ பைனான்ஷியல் ஸ்ட்ரெஸ்ஸை எப்படி நிர்வகிப்பது மற்றும் குறைப்பது என்பது குறித்து விளக்குகிறது. ஐந்தாவது பகுதி ஃபைனாஷியல் ஸ்ட்ரெஸ்ஸை சரிவர நிர்வகிப்பதன் மூலம் எப்படி நம்முடைய வாழ்வில் நல்ல விஷயங்களெல்லாம் வரிசையாக வந்து சேரும் என்பதை விளக்கமாக கூறுகிறது.

ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கும் இன்றைய காலகட்டத்தில், அதைக் குறைப்பதும் தவிர்ப்பதும் எப்படி என்பதைச் சொல்லும் இந்தப் புத்தகத்தை அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




**0777 43 55 57**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.10.2024இல் வெளியிடப்பெற்றது.